# பாட்டாளி சிந்தனை

Volume 23 No. 8
April 2013

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா
SUCI
தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ. 3.00

# வரலாற்று சிறப்புமிக்க ஏப்ரல் 24 நீடூழி வாழ்க!



*மேலோட்டமாக, அரசியல் அரங்கில் போட்டியிடக்கூடிய சக்திகள் ஏராளமாக இருப்பதாகத் தோன்றினாலும், இவை அனைத்தும் ஒன்றை ஒன்று எதிர்த்துக் கொள்வதாக செய்தி ஊடகங்கள் காட்ட முயற்சித்தாலும், இறுதிப் போராட்டத்தின் பார்வையில் நோக்குங்கால் அரசியலில் போட்டியிடும் சக்திகள் இரண்டு மட்டுமே இருப்பதாக நான் கருதுகிறேன். ஒன்று புரட்சிக்காக, மற்றொன்று அது என்ன பெயரில் இருந்தாலும் புரட்சிக்கு எதிராக இருப்பது. ஒன்று புரட்சியை எதிர்ப்பதற்கான அரசியல் அது காங்கிரஸால் கட்டமைக்கப்படலாம். இன்னும் சரியாகச் சொல்லப்போனால் காங்கிரஸின் அரசியலால் அது கட்டமைக்கப்படலாம். இடதுசாரிவாதம் என்று பொய் முத்திரை குத்தப்பட்ட தந்திரங்களை கைக்கொள்வதன் மூலமாக இருக்கலாம் அல்லது ஜனநாயக சோஷலிசம் என்ற ஏமாற்று கோஷங்களில் ஈடுபடுவதன் மூலமாக இருக்கலாம் அல்லது வீராவேச வித்தைகளை காட்டும் அரசியலுடன் வலதுசாரி பிற்போக்கு கோஷங்களை பல்வேறு வகையில் புனையும் அரசியலாக அது இருக்கலாம். மற்றொன்று புரட்சியை ஸ்தாபிக்கும் அரசியலாகும்...*

*எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் கட்சிகள் மக்கள் இயக்கங்களில் கடைப்பிடிக்கும் போர்த் தந்திரங்கள் அரசியல் விழிப்புணர்வற்ற தமது கட்சிகளின் ஊழியர்களை ஆதரவாளர்களை தக்க வைத்துக் கொள்ளவும் மக்களின் பெரும்திரளை குழப்புவதற்காகவும் அவர்கள் மேற்கொள்ளும் ஜாலங்கள் கூட இறுதியில் புரட்சிகர மக்கள் இயக்கத்தை வளர்த்தெடுக்கும் வழியில் தடைகளையே ஏற்படுத்துகின்றன. இவ்வனைத்து செயல்பாடுகளாலும் இவர்கள் தேர்தல் மைய அரசியலை மட்டுமே வலுப்படுத்துகின்றனர். இவர்களின் இத்தகைய அரசியல் ஒருபோதும் முதலாளித்துவத்தை வலுவிழக்கச் செய்யப் போவதில்லை, செய்யவும் முடியாது...*

*இடதுசாரி முத்திரை கொண்டவை உட்பட அனைத்து கட்சிகளும் எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) ஐ தனிமைப்படுத்த கூட்டு சேர்ந்துள்ளன. ஒன்றாக இணைந்து எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) ஐ மூலைக்குத் தள்ளுகின்றன. தங்களின் முழுக்க முழுக்க தீமையான தேர்தல் மைய அரசியலுக்கு, வித்தை அரசியலுக்கு, மந்திரி பதவிகளையும் அதிகாரங்களையும் பற்றிக்கொள்ளும் அரசியலுக்கு, தங்களின் அரசியல் ஊழியர்களை சந்தர்ப்பவாதிகளாக கோழைகளாக தரம் தாழ்த்தும் அரசியலுக்கு எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) அடிபணிய வேண்டும் என அக்கட்சிகள் விரும்புகிறார்கள். கூட்டு சேர்ந்து அவர்கள் கொடுக்கும் அழுத்தத்திற்கு எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) என்றுமே அடிபணியாது, பணியவும் முடியாது.... அவர்களின் அரசியலை எதிர்க்கொள்ளும் சவாலை எடுத்துக் கொண்டுவிட்ட, அவர்களின் இந்த அரசியலை மக்களிடம் முழுமையாக அம்பலப்படுத்துகின்ற, மக்களை ஏமாற்றுதல் மற்றும் தந்திரங்கள் செய்தல் போன்ற தேர்தலை மையமாகக் கொண்ட அரசியலுக்கு எதிராக உண்மையான சவாலை கையில் எடுத்துக் கொண்டுவிட்ட உயர்ப்புடனான எதிர்ப்பாகவும் சவாலாகவும் எஸ் யு சி ஐ தனித்து நிற்கிறது.*

**– சிப்தாஸ் கோஷ்**

*(இந்தியாவில் மக்கள் இயக்கமும் இளைஞர்களின் கடமையும், 1975ல் ஆற்றிய உரை)*

## தேசிய அடையாள அட்டை அல்லது ஆதார் திட்டம்

# சில முக்கிய கேள்விகள்

பெரிதாக பேசப்பட்ட ‘ஆதார்’ திட்டம் சமீபத்தில் மீண்டும் தலைப்புச் செய்தியாகி இருக்கின்றது. உணவு, உரம், எரிபொருள் (சமையல் வாயு, மண்ணெய் முதலியன) போன்றவற்றுக்கான மானியத்தை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்துவதற்கு இந்த திட்டத்தை பயன்படுத்துவது என்று காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் – 2 முடிவு செய்து உள்ளது. இத்திட்டத்தின் அடிப்படையில் உணவு பாதுகாப்பு மசோதாவையும் 12 இலக்கங்கள் கொண்ட தனித்தன்மை வாய்ந்த அடையாள எண்ணின் பிராண்ட் பெயர்தான் ‘ஆதார்’ ஆகும்.

இத்திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட அதிகார அமைப்பாகிய ‘தேசிய அடையாள அட்டைக்கான இந்திய ஆணையம்’ இந்த 12 இலக்க அடையாள எண்ணை இந்திய குடிமக்கள் அனைவருக்கும் வழங்கும். அரசாங்கத்தின் கூற்றுப்படி அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களிலுள்ள தனிநபர் விவரங்களில் (Data Bases) காணப்படும் இரட்டிப்பு மற்றும் போலி அடையாளங்களை சுலபமாகவும் அதிக செலவில்லாமலும் ‘ஆதார்’ அடையாள எண் நீக்கிவிடும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் வாக்காளர் அட்டை, வருமான வரிக்கான தனிக் கணக்கு எண் அட்டை (PAN Card), பாஸ்போர்ட், குடும்ப ரேஷன் அட்டை போன்ற பல்வேறு அடையாள அட்டைகளுக்கு பதிலாக செல்லத்தக்க அடையாளமான ஒரேயொரு தனித்தன்மைமிக்க ஆவணமாக ஆதார் அட்டை விளங்கும். இந்தத் திட்டத்தில் மேற்குறிப்பிட்ட 12 இலக்க தனித்தன்மைமிக்க எண் கொண்ட அடையாள அட்டை ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கப்படும். சுலபமான அடையாள சரிபார்த்தலை ஏற்படுத்துவதோடு இந்த ஆதார் அட்டை தனியார் மற்றும் அரசுத்துறைகளின் சேவையை சிக்கலின்றி பெறுவதற்கும் உரிய பயனாளிக்கு நலத்திட்டங்கள் சென்றடைவதற்கும் வங்கிப்பணிகள், காப்பீடு உள்ளிட்ட மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளின் இ–கவர்னன்ஸ் எனப்படும் மின்னணு ஆட்சிமுறைக்கு அடிப்படையாகவும் உதவுகிறது.

மிகப் புதுமையான திட்டம் போல இத்திட்டம் வெளிக்கு தெரிகிறது. ஆனால் இத்திட்டம் சர்ச்சையானதாகவே உள்ளது. தகவல் ஒன்றிணைத்தல் (Data Covergence), குறைபாடு கொண்ட தொழில் நுட்பம், தேச பாதுகாப்பு, தனிநபர் பாதுகாப்பு, அபரிமிதமான செலவினம், சேர்த்தல் மற்றும் நீக்கல் தனிநபர் பற்றிய தகவல்களை சேகரித்து, கைவசம் வைத்திருந்து, பயன்படுத்துவதற்கான அதிகாரத்திற்கான ஆதாரம் அகியவை குறித்து இத்திட்டம் பல முக்கிய ஆழமான கேள்விகளை எழுப்பியுள்ளது. இத்திட்டத்தின் செயல்பாடு சாத்தியக்கூறுகள் பற்றியும், இதனை அறிமுகப்படுத்தியதற்கான நோக்கம் பற்றியும் உக்கிரமான விவாதங்கள் நடைபெறுகின்றன. எனவே, கிடைத்துள்ள உண்மை நிலவரங்கள், பகுத்தறிவு, தர்க்கம் ஆகியவற்றின் அடிப்படையில் இத்திட்டத்தின் பல்வேறு பக்கங்களை ஆய்வு செய்ய வேண்டிய தேவை எழுகிறது.

### ஆதார் திட்டம் பிறந்ததின் வரலாறு

ஆதார் அல்லது தேசிய அடையாள அட்டை திட்டமானது மத்திய திட்டக்கமிஷனால் முதலில் கருத்தாக்கம் செய்யப் பெற்றது. நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் ஏற்படுத்தப்படும் ஆதார் எண், எளிமையாக நலத்திட்டங்கள் வழங்குவதை ஏதுவாக்கும் என்று திட்டக்கமிஷன் கூறியது. காங்கிரஸ் தலைமையிலான மத்திய ஐ மு கூட்டணி அரசாங்கம் – 2 இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மிகுந்த ஆர்வம் காட்டிற்று. அது கடந்த 2009ம் ஆண்டு ஜனவரி 28ம் நாளன்று இந்திய தேசிய அடையாள அட்டை ஆணையத்தை ஏற்படுத்தியது. திட்டக்கமிஷனோடு இணைக்கப்பட்ட இந்த அலுவலகத்திற்கு போதுமான அதிகாரமும் நிதி ஆதாரமும் வழங்கப்பட்டன. இப்படிப்பட்டதொரு திட்டத்துக்கான அவசியம் குறித்து பொது அரங்கில் விவாதிக்காமலும் பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெறாமலும் மத்திய அரசாங்கம் இந் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்திய குடிமக்களுக்கும், குறிப்பிடப்படும் பிறவகை மக்களுக்கும் ஆதார் அடையாள அட்டை எண்கள் வழங்குவதற்கு தேவையான நிறுவன ரீதியான, தொழில்நுட்ப ரீதியான, சட்டபூர்வ உட்கட்டமைப்பை உருவாக்கி அமல்படுத்துவதற்கான ஆணையத்தை ஏற்படுத்தியதாக மட்டுமே மத்திய அரசாங்கம் அறிவித்தது. இதைத் தொடர்ந்து இதனை சட்டமாக நிறைவேற்ற கடந்த 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ‘இந்திய தேசிய அடையாள அட்டை ஆணைய மசோதா – 2010’ என்ற மசோதாவை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தது. ஆனால், இதனை கூர்ந்து பரிசீலனை செய்வதற்காக அதே ஆண்டு டிசம்பர் 10ம் தேதியன்று நாடாளுமன்ற நிலைக்குழுவிற்கு இம்மசோதா பரிந்துரைக்கப்பட்டது. 2011ம் ஆண்டு டிசம்பர் 8ம் தேதியன்று இம்மசோதோ மீதான நிலைக்குழு அறிக்கையை ஏற்றுக் கொண்டு அவ்வறிக்கையை டிசம்பர் 13ம் தேதியன்று பாராளுமன்றத்தின் முன்பு அரசாங்கம் சமர்ப்பித்தது. இவ்வறிக்கையில் ஏராளமான குற்றச்சாட்டுகளே நிறைந்திருந்தன. இவ்வறிக்கையின்படி ‘தெளிவற்ற இலக்கோடு’ இத்திட்டம் கருத்தாக்கம் செய்யப்பட்டுள்ளது. அமலாக்கத்தில் ‘திசை வழியற்றுள்ளது’, ‘ஏராளமான குளறுபடிகளுக்கு’ இட்டுச் செல்கிறது எனவும் அறிக்கை கூறுகிறது. இத்திட்டத்திற்காக உரிய சட்டத்தை வரையும் பணிகள் முடிவுறா நிலையில் இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருத்தல் “நீதி நெறிக்கு புறம்பானதும் பாராளுமன்றத்தின் உரிமைகளை (Preregotives) மீறுவ

தொடர்ச்சி 2ம் பக்கம்

# ஆதார் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள்

*1ம் பக்கம் தொடர்ச்சி*

தாகும்” எனவும் நிலைக்குழு கூறியது. பயோமெட்ரிக் எனப்படும் உடற்கூறு அடையாளப்பதிவு மற்றும் தனிநபர் விவரங்களை சேகரிப்பதும் ஆதார் அடையாள அட்டை எண்கள் வழங்குவதும் பாராளுமன்றத்தில் இம்மசோதா நிறைவேற்றப்படாத வரையில் சட்டரீதியாக செல்லாததாகும்.

நிலைக்குழுவின் இக்கருத்துக்கள் முற்றிலும் சரியானவை. அரசியல் சட்ட அமைப்பில் வழிவகை செய்யப்படாமல் அல்லது சட்ட வரம்புகளுக்கு உட்படுத்தப்படாத நிலையில் ஆணையத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் அரசியல் அமைப்பு சட்டத்தை மீறியதும் சட்டத்திற்கு புறம்பான செயல்களேயாகும். முடிவுகள் எடுப்பதிலும் செலவினங்களிலும் ஒளிவுமறைவற்ற தன்மை இல்லை. இவ்வமைப்பின் செயல்பாடுகளில் நம்பகத்தன்மையோ மேற்பார்வையோ செயலமைப்பு முறையோ இல்லை. இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் தலைவரான நந்தன் நில்கானி இத்திட்டத்தின் தலைவராக்கப்பட்டு அளவற்ற அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளார். ஏதோ காரணத்திற்காக பாராளுமன்றத்தால் தாக்கல் செய்யப்பட்ட இம்மசோதா நிறைவேற்றப்படவில்லை என்றாலோ இந்த அதிகார அமைப்பு செயல்படக்கூடாது என பாராளுமன்றம் கருதினாலோ இந்த ஏற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறிருந்தபோதும், முக்கியமான இரண்டு கூட்டணி கட்சிகள் ஆதரவை விலக்கிக் கொண்டதால் பாராளுமன்றத்தில் சிறுபான்மையாக குறைந்துவிட்ட காங்கிரஸ் தலைமையிலான ஐ மு கூட்டணி – 2 அரசாங்கமானது ஏறக்குறைய ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இது ஜனநாயகத்தை அவமதிக்கும் செயலாகும். இதனால்தான் சந்தேகம் எழுகிறது. பெரிதும் விவாதத்திற்கு உள்ளாக்கப்படவேண்டிய, மிகவும் அவசியமான திட்டத்தை பாராளுமன்றத்தையும் கூட புறந்தள்ளிவிட்டு செயல்படுத்துவதற்கு அரசாங்கத்தை தூண்டியது எது?

## ஆதார் திட்டத்தின் நோக்கங்களாக கூறப்படுபவை

மக்களை உள்ளடக்கிய வளர்ச்சியை ஏதுவாக்க இந்த தேசிய அடையாள அட்டை திட்டம் உதவும் என்று அரசாங்கமும் திட்டக்கமிஷனும் கூறுகிறது. இந்தியாவில் தங்கியுள்ள தனிநபர்கள் இந்த அமைப்பு ஏற்படுத்தியுள்ள சரிபார்த்தல் முறைக்கு திருப்திகரமாக பதிலளிப்பார்களாயின் வங்கிகள் மற்றும் தகவல் தொடர்பு கம்பெனிகளுடன் தனித்தன்மை வாய்ந்த அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும். குறுநிதி, மைக்ரோஃபைனான்ஸ் வழங்கல், நுகர்வோரை சேர்த்தல், கே ஒய் சி எனப்படும் ‘உங்கள் நுகர்வோரை அறியுங்கள்’ நோக்கத்திற்காக கே ஒய் ஆர் எனப்படும் உங்கள் வசிப்பிடம் அறியுங்கள், போன்றவற்றுக்கு ஆதார் எண் கொண்டு தீர்வு காணப்படும். தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம், முதியோர் ஓய்வூதிய திட்டம், பொது விநியோக திட்டம் போன்றவற்றுக்கான பயனாளிகள் பட்டியலை தயாரிப்பதோடு பினாமி வங்கிக் கணக்குகளை கண்டறிந்து ஒழிப்பதற்கும் இந்த ஆதார் எண் உதவும். இவ்வாறாக பயனாளிக்கு நேரடியாக பணம் பெறும் முறையை ஆதார் திட்டம் செயல்பாட்டிற்கு கொண்டு வரும்.

நாட்டின் மூலை முடுக்கெங்கும் உள்ள மொபைல் ரீசார்ஜ் ஏஜெண்டுகளை போல் ஆதார் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட வங்கிச் சேவை முகவர்கள் ஏற்படுத்துவதன் மூலம் தங்களது வங்கிக் கணக்கில் கட்டப்பட்ட மானியத் தொகையை பயனாளிகள் எடுத்துக்கொள்ள முடியும். இந்த முகவர்கள் பயனாளிகளின் அட்டையை அடையாள சரிபார்ப்பு செய்தபின் மானியத் தொகையை வழங்குவார்கள். அதாவது மானியத் தொகையை பெறுவதற்காக பயனாளி பல மைல்கள் கடந்து வங்கிக்கு செல்ல வேண்டியதில்லை. தனித்தன்மையையும் அடையாளத்தையும் தேசிய அடையாள அட்டை திட்டம் உத்தரவாதப்படுத்துவதால் தொடர்ந்து இடம் மாறிக் கொண்டிருக்கும் தொழிலாளி (அதாவது மைக்ரண்ட் தொழிலாளி) கூட தனது வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோருக்கான குடும்ப அட்டையை எளிதில் புதிய இடத்திற்கு இடம் மாற்றிக் கொள்ளவும் எவ்வித சிரமமின்றி வங்கிக் கணக்கை துவக்கிக் கொள்ள முடியும். இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி இந்த ஆதார் திட்டமானது ஏழைகளின் நலனை கருத்தில் கொண்டு செயல்படக்கூடியது என்று இத்திட்டத்துக்கு வாக்காலத்து வாங்குவோர் கூறுகின்றனர்.

தேசிய அட்டை திட்டத்திற்கு ஆதரவாக முன்வைக்கப்படும் வாதங்கள் உண்மையில் வலுவானவை அல்ல. இத்திட்டத்தின் விமர்சகர்கள் கூறுவதைப் போல நலத்திட்டங்கள் உரியோருக்கு கிடைக்காமல் போவதற்கும் தகுதியற்ற புல்லுருவிகள் புசிவதற்கும் காரணம் தங்களது அடையாளத்தை நிரூபிக்க முடியாதது அல்ல. மாறாக, நலத்திட்டங்களையும் பலன்களையும் கட்டுப்படுத்தி ஆளக்கூடிய அதிகாரம் படைத்தோர் வேண்டுமென்றே தங்களுக்கு ஏற்றவாறு இந்த முறைமைகளை கையாள்வதாலேயே உரியோருக்கு பலன்கள் கிடைக்காமல் போவதும், தகுதியற்றோருக்கு கிடைப்பதும் நடக்கின்றன.

உதாரணத்திற்கு, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோருக்கான குடும்ப அட்டை வைத்திருப்போர் தங்களுக்குரிய கோட்டாவின்படி உணவு தானியங்கள் பெற முடியாமல் போவதற்கு காரணம் அக்குடும்ப அட்டைகளின் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாவதால் அல்ல. மாறாக, ரேஷன் கடை உரிமையாளர்கள் பொருட்களை கள்ளச்சந்தைக்கு திருப்பிவிடுவதாலும் மக்களுக்கு தரவேண்டிய அளவைக்காட்டிலும் குறைந்த அளவில் பொருட்கள் வழங்குவதாலாகும். அதேபோல், தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்த மாணவர்களுக்கு சேரவேண்டிய கல்வி உதவித் தொகை அவர்களுக்கு கிட்டாமல் போவதற்கு காரணம் அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்கள்தானா என்ற ஐயப்பாடு எழுவதால் அல்ல; மாறாக, போலி ரசீதுகளில் கட்டாயப்படுத்தி பெற்றோர்களின் கையொப்பம் பெற்று அப்பணத்தை தங்கள் பாக்கெட்டில் பதுக்கிக்கொள்ளும் ஊழல் வாதிகளின் கூட்டுக்கும்பல் பணபட்டுவாடா செயலமைப்பு முறையை தன் கட்டுக்குள் வைத்திருப்பதாலாகும். தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி (என் ஆர் இ ஜி எஸ்) திட்டத்தின் தொழிலாளிகள், குறிப்பாக பெண் தொழிலாளிகள், தங்களுக்கு சேரவேண்டிய கூலியைக் காட்டிலும் குறைவாக பெறுவதற்கு காரணம், தாங்கள் செய்ய வேண்டிய அளவிற்கு உழைத்துள்ளதை நிரூபிக்க முடியாததால் அல்ல; மாறாக, மனசாட்சியற்ற மேற்பார்வையாளர்களும், அதிகாரிகளும் ஊழல் நிர்வாகத்துடன் கூட்டு சேர்ந்துகொண்டு மீதிப்பணத்தை கையாடல் செய்வதாலாகும். இவ்வாறு தகுதியற்ற இடங்களுக்கு பலன்கள் சிதறிப்போவதையும் கோணல்களையும் ஆதார் எண் எவ்வாறு சரி செய்யப்போகிறது?

## இடைத்தரகர்களை ஒழித்துக்கட்டுதல் – யதார்த்தத்தில் இயலாதது

ஆதார் திட்டம் இடைத்தரகர்களை ஒழித்துக்கட்டிவிடும் என்பதையும் யதார்த்த நிலை பெய்யாக்குகிறது. உதாரணமாக, பெரிதாக பேசப்பட்ட நேரடி பணம் மாற்று திட்டம் (Direct Cash Transfer Scheme - DCTS) உணவுப்பொருட்கள், உரங்கள், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் போன்றவற்றுக்கான மானியத்தை பணமாக மாற்றி பயனாளிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்துவது என்ற இத்திட்டம் ஆதார் மூலமான பணம் மாற்று திட்டமாக கருத்துருவாக்கம் செய்யப்பட்டது. ஆனால் உண்மை என்னவெனில், வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் குடும்பங்கள் உள்ளிட்ட பெரும்பாலான கிராமப்புற ஏழைகளுக்கு வங்கிக்கணக்கு கிடையாது; வங்கிக் கிளைகள் இல்லாத கிராமங்கள் அநேகம். மேலும், மானிய தொகையை வங்கிக் கணக்கிலிருந்து எடுப்பதற்கு பயனாளிகள் நேரடியாக வங்கியில் ஆஜராக வேண்டும். பல கிராமவாசிகளுக்கு, குறிப்பாக மூத்த குடிமக்களுக்கு, இது மிகவும் சிரமமான காரியமாகும். ஏனெனில் பல கிராமங்கள் அருகாமை வங்கியிலிருந்து குறைந்தது **8–15** கி மீ தொலைவில் உள்ளன. இந்த வங்கிகளுக்கு சென்றுவர பயனாளிகள் தங்கள் ஒருநாள் கூலியை இழந்து போக்குவரத்து செலவினம் மேற்கொள்ள வேண்டும். இது நடைமுறை சாத்தியமில்லை.

இந்த சிரமங்களை சமாளிப்பதற்கு அரசாங்கம் ஒரு புதிய ஏற்பாட்டை முன்வைக்கிறது. ‘கிளையற்ற வங்கிச்சேவை’ என்பது இதன் பெயர். இதற்காக கிராமப்புறங்களில் ‘பேங்கிங் கரஸ்பான்டன்டுகள்’ எனப்படும் ‘வங்கிச் சேவை முகவர்கள்’ சிலர் நியமிக்கப்படுவர். இந்த முகவர்கள் மூலம் கிராமப்புற பயனாளிகள் தங்கள் வங்கிக் கணக்கிலிருந்து மானியத்தொகைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று அரசாங்கம் கூறுகிறது. இவ்வாறு பணமெடுப்பதற்கு ஆதார் உதவிகொண்ட உடற்கூறு அடையாளங்காண் கருவிகள் (Biometric Device) அல்லது மொபைல் ஃபோன்களை பயன்படுத்தி பயனாளிகள் உரிய நபர்கள்தானா என இம்முகவர்கள் உறுதிப்படுத்திக் கொள்வர். இவ்வாறு மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பணப்பரிமாற்றத்திற்கும் குறிப்பிட்டதொரு தொகையை இம்முகவர்கள் கமிஷனாக பெறுவர். பொதுத்துறை வங்கிகள் அதிக எண்ணிக்கையில் கிராமப்புறங்களில் வங்கிக்கிளைகளை துவக்குவதற்கு சுணக்கம் காட்டியதால் இந்த வங்கிச் சேவை முகவர்கள் என்ற ஏற்பாடு (Model) யோசனை செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டை கவர்ச்சிகரமாக்குவதற்காக “லாபத்துக்கான கம்பெனிகளை” வங்கிச்சேவை முகவர்களை நியமிப்பதற்கு இந்திய ரிசர்வ் வங்கி **2010**ம் ஆண்டில் அனுமதியளித்தது. இதன் நோக்கம் தெளிவாக தெரிகிறதல்லவா? அரசாங்கத்திடமிருந்து கமிஷன் பெற்றுக்கொண்டு இயங்கக்கூடிய தனியார் துறையை கிராமப்புற வங்கிகளாக ஊக்குவிப்பதுதான் அரசாங்கத்தின் உள்நோக்கமாகும். ஊழலின் மற்றொரு மடைக்கதவை இது திறந்துவிடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஏனெனில் பெரும்பாலும் கிராமத் தலைவர்களும், கந்துவட்டி விடுவோரும், உர விற்பனையாளர்களுமே வங்கிச் சேவை முகவர்களாக தங்களை இணைத்துக் கொண்டு தங்களது அதிகாரத்தின் மூலம் ஏழைகளுக்கான நலத்திட்ட பலன்களை சுருட்டிக் கொள்வர்.

நிஜ நிலையும் இதைத்தான் சொல்கிறது. எகனாமிக் டைம்ஸ் பத்திரிக்கையில் பஞ்சாபிலிருந்து பிரசுரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று “வங்கிச்சேவை முகவர்களில் முக்கால்வாசிப்பேர் கிராமத் தலைவர்கள் அல்லது அவரது குடும்பத்தினராக உள்ளனர்” என்று கூறுகிறது. “வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் அதிகமான கட்டணத்தை நுகர்வோரிடமிருந்து கட்டாய வசூல் செய்து வங்கிச் சேவை முகவர்கள் முறைகேடுகளில் ஈடுபடுவது தெரிவதாக” மார்ச், **2011**ல் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா உள் சுற்றுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. “நிர்க்கதியான நுகர்வோர்கள்” “சுரண்டப்படுவதாக”வும் வங்கியின் பேருக்கும் பெருமைக்கும் இதனால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வங்கி ஊழியர் சங்கங்களின்படி, துவக்கப்படும் ஒவ்வொரு வங்கிக் கணக்கிற்கும் இம்முகவர்கள் ரூ.100/– பிடுங்கிக் கொள்கின்றனர்.

ஆதார் திட்டம் இடைத்தரகர்களை ஒழித்துக் கட்டவில்லை என்பது இதிலிருந்து தெளிவாகிறது. சொல்லப் போனால், நாம் வாழும் முதலாளித்துவ அமைப்பு முறையில் இடைத்தரகர்களை முற்றிலும் ஒழித்துக்கட்டுவது சாத்தியமில்லை என்றே நமது அனுபவம் கூறுகிறது. ஏனெனில், இந்த அமைப்பு முறை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நியாயமாக சேர வேண்டிய சொற்பத் தொகையையும் அவர்களுக்கு மறுத்து அவற்றை சுருட்டுவதன்மூலம் தன்னை பெருத்துக்கொள்வதுதான் இந்த ஒட்டுண்ணிகளின் ஜீவிக்கும் முறையாகும். இடைத்தரகர்கள் என்போர் இந்த ஒட்டுண்ணிகளன்றி வேரல்லர். முதலாளித்துவ சுரண்டலமைப்பு முறை இடைத்தரகர்களெனும் இந்த ஒட்டுண்ணிகளை வளர்த்துவிட்டு பாதுகாக்கிறது. வாழ்க்கைத் தேவைகளால் அமுக்கப்பட்ட திக்குதிசையறியாத ஏழை எளிய மக்களின் நிர்க்கதியான நிலையையும் அறியாமையையும் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு, நலத்திட்ட உதவிகள் பெற்றுத் தருவதற்கு துணைபுரிவோர் என்ற வேடந்தரித்து ஊழல் நிர்வாகத்தின் துணைகொண்டு சாதாரண மக்களுக்கு சென்றடைய வேண்டிய பலன்களின் பெரும்பகுதியை சுருட்டிக் கொள்கின்றனர். எனவே, ஆதார் திட்டம் இடைத்தரகர்களை ஒழித்துக்கட்டிவிடும் என்று கூறுவது வெட்டிப் பேச்சு மட்டுமல்ல அது ஏமாற்று செயலுமாகும். ஒடுக்கும் முதலாளித்துவ அமைப்பில் மென்னியை முறிக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்த்துப் போராடி வெல்வதற்கு சக்திவாய்ந்த நன்கு கட்டமைக்கப்பட்ட ஜனநாயக இயக்கத்தை சார்ந்திருப்பதைத் தவிர வேறு பாதை எதுவும் இல்லை.

## அமுல்படுத்துதலில் உள்ள ஆபத்துகள்

அடுத்து வருவது திட்ட செயல்பாட்டுக்கான சாத்தியக்கூறுகளாகும். (அதாவது திட்டத்தை செயல்படுத்த முடியுமா முடியாதா என்ற கேள்வி). பயனாளிகள் சம்பந்தப்பட்ட தேவையான தகவல்கள் அனைத்தையும் தேசிய அடையாள அட்டை உள்ளடக்கும். இத்தகவல்கள் இருவகைப்படும். அவை, டெமாக்ரஃபி எனப்படும் புறவாழ் தகவல்கள் மற்றும் பயோமெட்ரிக் எனப்படும் உடற்கூறளவு

தொடர்ச்சி 5ம் பக்கம்

# இடஒதுக்கீட்டுக் கொள்கை – தற்போதைய நிலை

வேலை, பணி உயர்வு மற்றும் கல்விக்காக ஜாதி, இன, மதம் மற்றும் பாலின அடிப்படையில், பலதரப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்க உரத்துக் கூக்குரலிடுவது நமது இன்றைய அரசியலில் ஒரு சம்பிரதாயமாகக் ஆகிவிட்டது. இதனை மையப்படுத்தி பல்வேறுபட்ட பகுதி உழைக்கும் மக்களிடையே வன்முறை மிகுந்த மோதல்கள் நடைபெறுவதையும் அதில் மதிப்புமிக்க உயிர்கள் மடிவதையும் நாம் கண்டுவருகின்றோம். இந்த இடஒதுக்கீட்டுச் சர்ச்சை பாராளுமன்ற நடவடிக்கைகளில் தடங்கல்களை ஏற்படுத்தி வருகின்றன. இந்த வாக்கு வங்கி அரசியல் கட்சிகள் தாங்கள் ஒவ்வொருவரும் இந்த அல்லது அந்த சமூக வகுப்பினரின் நலன்களுக்காக எந்த அளவு அக்கறையோடிருக்கிறோம் என்பதை விளம்பரப்படுத்திக் காட்டுவதற்காக பாராளுமன்றத்தின் அவைகளில் ஒருவரை விஞ்சி ஒருவர் சொற்போர் நிகழ்த்துகின்றனர். இதுவரை ஒரு காலகட்டம் வரையில் இடஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (SC) தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் (ST) என்ற பிரிவினரோடு மட்டும் வரையறைப் படுத்தப்பட்டிருந்தது.

அதற்கு பின்பு உண்மையில், இட ஒதுக்கீடு என்பது கெடு நோக்கம் கொண்ட எவரும் எந்த நேரத்தில் தமது விருப்பத்திற்கேற்ப ஜாதி அல்லது மத ரீதியில் ஒரு பிரிவினர் மக்களை மற்றொரு பிரிவினருக்கு எதிராக தூண்டிவிட்டு அவர்களுக்கு இடையே வெறுப்பையும் மோதலையும் கொண்டு வருவதோடு அது சில வேளைகளில் இரத்தக் களறிக்கு இட்டுச்செல்லும் அளவிற்கு ஒரு பிரச்சினையாகிவிட்டது. தேர்தல் வருகின்றபோது, ஏழைகளுக்காகவும், வஞ்சிக்கப்பட்ட அடித்தட்டு மக்களுக்காகவும் இருப்பதாக மார்தட்டிக்கொள்ளும் இந்த அரசியல் கட்சிகள் தேர்தல் லாபத்தைக் குறிவைத்து இந்த இடஒதுக்கீட்டுப்பிரச்சினையை முடிந்த மட்டும் அதிகபட்சமாகத் தூண்டிவிடுகிறார்கள். ஏனெனில் மக்கள் ஜாதி மற்றும் மத அடிப்படையில் பிரிக்கப்பட்டு விடுவார்கள் – அதன் மூலம் கேடு கெட்ட வாக்கு வங்கி அரசியல் அவர்களுக்கு பலனளிக்கும். சமுதாயத்தின் அடித்தட்டு ஏழை மக்கள் மீது சுயதம்பட்ட அரசியல் பேர்வழிகளின் அக்கறை எவ்வளவு போலித்தனமானது என்பதைப் புரிந்துகொள்வதற்கொன்றும் அதிக புத்திசாலித்தனம் தேவையில்லை.

முதலாளித்துவத்தின் கீழ் சரிசமமாக நசுக்கப்பட்டு ஏமாற்றப்பட்ட மக்கள் இட ஒதுக்கீட்டுக்காகவும், கோட்டா முறைக்காகவும், தங்களுக்கிடையே சண்டையிடத் தூண்டிவிடப்பட்டு அவர்களின் கரங்கள் தங்களின் சகோதர இரத்தத்தால் கறை பட்டிருக்கின்ற வேளையில் அதிகாரப்பசி கொண்ட அரசியல்வாதிகள் தங்களின் ஜாதி, மத பின்னணியை யெல்லம் கடந்து அதிகாரத்தை அனுபவித்து வருவதுடன் – ஏராளமான செல்வத்தை குவித்து தங்களின் புகழையும் செல்வாக்கையும் அந்தஸ்த்தையும் வளர்த்து வருகிறார்கள். இதற்கு ஏராளமான உதாரணங்கள் சமுதாயத்தில் உண்டு. தங்களின் துன்பங்களுக்கும் ஏழ்மைக்குமான உண்மையான காரணங்களிலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்கு வசதியாக, இட ஒதுக்கீடு என்ற பூதத்தைக் கிளப்பி விட்டு ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களிடையே ஜாதி, வகுப்புவாத அடிப்படையில் செயற்கையாக துருவமயப்படும் நிலையை ஏற்படுத்துவதன் மூலம் வாக்குகளைத் தக்கவைத்துக் கொண்டு தங்களின் அரசியல் எதிர்கால நோக்கத்தினை பலப்படுத்திக் கொள்வது அதிகார ஆசை கொண்ட அரசியல்வாதிகளுக்கும் அவர்களின் அரசாங்கத்திற்கும் ஒரு கை தேர்ந்த கலையாக ஆகிவிட்டது.

## ஏன் இடஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டது ?

ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு அரசியல் சாசனத்தில் இடஒதுக்கீடு இணைத்துக் கொள்ளப்பட்டதன் நோக்கம் என்ன? மேற்கத்திய நாடுகளின் பூர்ஷ்வா வர்க்கம் முதலாளித்துவத்தின் துவக்க காலத்தில் நிலப்பிரபுத்துவத்தை ஒழித்து ஆட்சிக்கு வந்தது. ஆனால் தேசிய விடுதலை இயக்கத்திற்கு தலைமை தாங்கிய இந்திய பூர்ஷ்வா (முதலாளித்துவ) வர்க்கம் முதலாளித்துவம் சீரழிந்து அழுகிய காலகட்டத்தில்தான் ஆட்சிக்கு வந்தது. இந்திய முதலாளித்துவ வர்க்கத்தால் ஒரு சமரசமற்ற போராட்டத்தை சமூக கலாச்சார தளங்களில் நிலப்பிரபுத்துவ கூறுகளை எடுக்கவோ, ஜாதி அமைப்பு ஜாதிப் பெருமை ஜாதி வெறுப்பு உள்ளிட்ட பிற சமூக சீர்கேடுகளை அகற்றவோ முடியவில்லை. மேலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆளுகையில் அரசியல் சுதந்திரம் பெறுகின்ற காலகட்டத்தில் சமுதாயத்தின் பின்தங்கிய மக்களிடத்திலும் மற்றும் மிகவும் பாதகமான சூழ்நிலையில் இருந்த தலித் மக்களின் மனங்களிலும் நியாயமான வருத்தங்கள் சேகரமடைந்திருந்தன. இது அரசியல் சட்டத்தினை வடிவமைக்கும் பொறுப்பிலிருந்தவர்கள் இயற்றும் அரசியல் சாசனத்தில் இதற்கான நிவாரணத்திற்கான வழிவகைகள் செய்யவேண்டும் என்பதற்கான நிர்ப்பந்தத்தை அப்போது அவர்கள் மீது ஏற்படுத்தியது. இவ்வாறாக எஸ் சி, எஸ் டி பிரிவினருக்கு வேலையிலும் கல்வியிலும் இடஒதுக்கீட்டிற்கான சிறப்பு வழிவகைகள் அரசியல் சாசனத்தில் இடம்பெற்றன. இந்த இடஒதுக்கீடு அரசுப் பணியிலும், கல்லூரிகளிலும் அலுவலகங்களிலும் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் பொருந்துவதாக இருந்துவருகின்றது. மேலும் இதில் விகிதாச்சாரம் என்பது அந்தப்பிரிவு மக்களின் ஒட்டுமொத்த மக்கள் தொகையின் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டது. ஆனால் அரசியல் சாசனத்தை வரைந்தவர்கள் இந்த இடஒதுக்கீடு வழிமுறை என்பது நிரந்தரத்தன்மை கொண்டதாக இருக்க முடியாதென்றும் அது என்றென்றைக்கும் தலித் மக்கள் பின்தங்கியவர்கள்தான் என்பதற்கான ஒப்புதலை மறைமுகமாகக் கொடுத்துவிடும். மேலும் இது மற்றவர்களோடு அவர்கள் சரிசமமான போட்டியில் ஈடுபடுவதற்கு அவர்களை உயர்த்தும் செயல்முறைப்போக்கிற்கு தடையாக அமைந்துவிடுமென்று அறிந்தே இருந்தார்கள்.

போதிய அளவிற்கு மேம்பாடடையவும் மற்றும் பாராட்டத்தகுந்த தகுதிகள் வளர்ந்து பெருகுவதற்கு – ஒரு நல்ல மாணவன் தன் சக தகுதியுள்ள மாணவர்கள் பலருடன் போட்டியில் ஈடுபடும்போது தன்னுடைய திறமையை வளர்த்து கூர்மைப்படுத்திக் கொள்வதைப்போல அனைவர் மத்தியிலும் ஆரோக்கியமான போட்டி என்பது இருந்திடல் வேண்டும். ஆகையினால் அவர்கள் இந்த இடஒதுக்கீடு 10 வருட காலத்திற்கு தொடரும் என்றும் அதன் பிறகு இந்த இட ஒதுக்கீடு இந்த குறுகிய காலத்தில் எம்மாதிரியான இலக்குகளை எந்த அளவிற்கு எட்டியிருக்கிறது என்பது குறித்து ஒரு மறு ஆய்வு நடத்தப்படவேண்டும் என்ற நிபந்தனையை வற்புறுத்தினார்கள்.

## இடஒதுக்கீடு பின்தங்கியவர்களுக்கும் முன்னுரிமை (சலுகை) பெற்றவர்களுக்கும் எவ்வித நன்மையையும் கொண்டுவரவில்லை

இந்த இடஒதுக்கீட்டுக் கொள்கையின் விளைவு என்னவாக இருக்கிறது? வழங்கப்பட்ட பலன்கள், பெரும்பாலான தலித் மக்களை போய் சேர்ந்ததா? இதற்கு அனைவரும் ஒரு சேர 'இல்லை' என்றே பதிலளிப்பார்கள் அதற்கு மாறாக சுதந்திரத்திற்குப் பிந்தைய 65 ஆண்டுகாலங்களில் பிற பகுதி அடித்தட்டு மக்களை போலவே அவர்களின் நிலைமை மேலும் மோசமடைந்திருக்கிறது. பின்தங்கிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் பெரும்பாலும் எஸ் சி, எஸ் டி யாக இருக்கிறார்கள், ஏழ்மையிலும் வறுமையிலும் உழன்று வருகிறார்கள். 60 சதமான தலித் மக்களும், 70 சதம் எஸ் டி மக்களும் இன்னும் எழுத்தறிவற்றவர்களாக இருந்துவருகிறார்கள். வறுமையின் காரணமாக பள்ளிக்கூடங்களிலிருந்து இடைநின்றுவிடுகின்ற தலித் குழந்தைகளின் எண்ணிக்கை, எவ்வாறாயினும் குடும்பத்தை நடத்த வருமானம் ஈட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டு படிப்பை நிறுத்திவிடுபவர்களின் எண்ணிக்கை 80 சதமாக இருக்கிறது. உயர் தொழில்நுட்பப் படிப்பில் எஸ் சி எஸ் டி பிரிவினருக்காக ஒதுக்கப்பட்டுள்ள 80 சதம் இடங்கள் பொருத்தமான மாணவர்கள் இல்லாததால் இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருந்துவருகின்றன. மேலும் இட ஒதுக்கீட்டு நிபந்தனையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட பணி இடங்களிலும் கூட போதிய எண்ணிக்கையில் பணியிடத்தகுதியுடைய தலித் பிரிவினர் இல்லாததால் நிரப்பப்படாமல் காலியாக இருந்துவருகின்றன. இது முதலாளித்துவ இந்தியாவில் தவிர்க்கப்படவியலாததாகும். நெருக்கடியினால் பீடிக்கப்பட்டுள்ள உலக முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் பிரிக்கவியலாத பகுதியாக இந்திய ஆளும் முதலாளிவர்க்கம் இருந்து வருவதால் இந்த அனைத்துத் தீங்குகளாலும் பீடிக்கப்பட்டதாகவே அது இருந்திட முடியும். மேலும் மிகக் குறுகிய காலத்தில் இந்தத் தீவிர நெருக்கடியும், நிலையற்ற தன்மையும் சுதந்திர இந்தியாவின் சமூகப் பொருளாதார – அரசியல் கலாச்சார களங்கள் அனைத்திலும் தனது பிடியை இறுக்கியதை நாம் கண்டுவருகிறோம். சமூகம் ஜாதி, மத வேறுபாட்டிற்கெல்லாம் அப்பாற்பட்டு கையளவு பணக்காரர்கள் என்றும் கணக்கில்லாத ஏழைகள் என்றும் சமூகம் கூர்மையாக பிளவுபட்டு வருகிறது. இந்தப் பிளவு கணந்தோறும் மேலும் மேலும் அதிகரித்தும் வருகிறது. ஈவு இரக்கமற்ற முதலாளித்துவச் சுரண்டல் காரணமாக மக்களின் வாங்கும் சக்தி வீழ்ச்சியுறுவதன் காரணமாக தீவிரமான சந்தை நெருக்கடி ஏற்பட்டு, இருக்கின்ற தொழிற்சாலைகளின் கதவுகளும் இழுத்து மூடப்பட்டுவருவதால் யதார்த்தத்தில் வேலைவாய்ப்பு என்பதே மக்களுக்கு இல்லாத நிலை என்பது இருந்துவருகிறது. புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதில்லை. பணிநீக்கம், லே ஆஃப், மற்றும் கட்டாயப் பணி ஓய்வு, ஆகியவை பன்மடங்கு அதிகரித்துவருகின்றன. இதனால் வேலையின்மைப் பிரச்சினை மிகவும் உயர்ந்து வருகின்றது.

இதைப்போலவே, முதலாளித்துவ இந்தியாவில் கல்விக்கான வாய்ப்புகள் தொடர்ந்து மேன்மேலும் வெட்டிக்குறைப்பது நடந்துவருகின்றது. படித்தவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பது அதிக எண்ணிக்கையில் படித்த வேலையற்றவர்களின் எண்ணிக்கையாக உயர்ந்து – வேலைவாய்ப்பு குறைந்து வருவதற்கான காரணங்கள் குறித்து கேள்வி எழுப்புகிறவர்களாக பெருகுவார்கள். எனவே ஆளும் இந்திய பூர்ஷுவா வர்க்கமும் அதன் அடிவருடி அரசாங்கங்களும் கல்வி பரவலை குறைப்பதில் குறியாக இருந்துவருகிறார்கள். துவக்கத்தில் இது கல்வி பயிலிடங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் துவங்கி, தற்பொழுது கல்விக் கட்டணங்களை பெருமளவிற்கு அதிகரித்தல், கேபிடேசன் கட்டணத்தை கட்டாயமாக்குதல், அரசுப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் மூடுதல், மற்றும் தனியார்வசம் கல்வித்துறையை ஒப்படைத்து வியாபார அடிப்படையில் அவற்றை வழிநடத்திட வழிசெய்தல் என அனைத்து வழிகளையும் அவர்கள் மேற்கொண்டுவருகிறார்கள். ஒட்டுமொத்தத்தில் சுருக்கமாகச் சொல்வதென்றால் மேட்டுக்குடியினர் மட்டுமே ஆதிக்கம் செலுத்துவதாக மாறிவிட்ட உயர்கல்வியை விட்டுவிட்டாலும் கூட – ஜாதி, மத, இன பகுபாடுகளையெல்லாம் மீறி சகல ஏழை மற்றும் நடுத்தர மக்கள் அனைவருக்கும் அடிப்படைக்கல்வியும் கூட இன்று மறுக்கப்பட்டுவருகிறது. மேலும் அலட்சியம் ஏமாற்றும் மற்றும் வஞ்சனை மிகுந்த இக்காலத்தில் பின்தங்கிய மக்கள் பகுதியினர் தங்களை சரிசமமான போட்டியாளர் நிலைக்கு உயர்த்திக் கொள்ள உதவியளிக்கப்படுவதற்கு மாறாக மேலும் சீரழிவிற்குள் ஆழ்த்தி அமுக்கப்படுகிறார்கள்.

தலித் மக்கள் மத்தியிலும் மற்றும் பிற பின்தங்கிய மக்கள் பகுதியினர் மத்தியிலும் ஒடுக்கு முறை முதலாளித்துவ வர்க்கம்தான் சகல பிரச்சினைகளுக்கும் காரணம் என்ற உண்மை வெளிப்படுத்தப்பட்டுவிடாமல் இருக்க ஆளும் முதலாளி வர்க்கம் சூழ்ச்சிகரமாக – இடஒதுக்கீட்டின் வழிமுறைகளை, அதிகாரத்தை தவறாகப்பயன்படுத்தி தலித் மக்களின் ஒரு சிறிய பகுதியினருக்கு சலுகைகள் பலவற்றை வழங்கி ஆசைகாட்டிக் கவர்ந்திழுக்க முயற்சி செய்தது. இவ்வாறாக தலித்துகள் கிட்டத்தட்ட 3 சதமானவர்கள் அனைத்து வாய்ப்புகளையும் பலன்களையும் சுவீகரித்துக் கொண்டு ஒரு 'மேலடுக்கு தலித்துகளாக' உருவாகியிருக்கிறார்கள். ஒரு மிகச் சிறிய செழிப்படைந்த 'மேட்டுக்குடி' எல்லா முன்னுரிமைகளையும் அதிகாரங்களையும் அனுபவித்து சமுதாயத்தில் செல்வம்படைத்த வர்க்கத்தின் ஒரு பகுதியாகமாறி பின்தங்கிய ஜாதி, சமூகப்பிரிவு மக்களின் வாழ்க்கைத்தரமும் நிலைமையும் மிகத் தீவிரமாக சீரழிந்து வருவது குறித்து எவ்வித அக்கறையும், சுரணையும் இன்றி சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்திவருகிறார்கள்.

ஆளும் வர்க்கம் இதில் மேலும் ஒரு சூழ்ச்சியான காய்நகர்த்தலாக மிகுந்த ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுவந்த வெகுஜனங்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினரை தனது வர்க்க நலன்களுக்கு வளைந்து கொடுக்கின்றவர்களாக இருக்கும்படி கூறுபிரித்திருக்கின்றது. மேலும் இதனை தலித்மக்கள் செழிப்படைந்துவிட்டதற்கான அத்தாட்சியாகவும் முன்நிறுத்துகிறது. தலித் மக்களின் செல்வாக்குப்பெற்ற தலைவர்கள் என்ற ஆர்ப்பரிப்பிலும், பகட்டிலும் வழக்கமாக ஈடுபட்டு வரும் ஒரு அரசியல்வாதிகள் கூட்டம் தங்களை தலித் வாக்காளர்களுக்குப் பிடித்தமானவர்களாக மாற்றுவதற்காக செல்வச் செழிப்பின் உச்சியில்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# பின்தங்கிய பகுதியினரை சமதளத்திற்கு உயர்த்துவது என்று அறிவிக்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது

3ம் பக்கம் தொடர்ச்சி

அமர்ந்து கொண்டு ஊழல்களில் ஈடுபட்டு வருவதுடன், தங்களது சுய செல்வாக்கை போலித் தனமாக உயர்த்திக் கொள்வதுடன் அதிகாரத்தில் நீடிக்க சகலவிதமான நெறியற்ற வழிமுறைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதைப் பார்க்கிற போது வியப்பில் புருவங்கள் உயர்கின்றன.

இதன் மறுவினையாக இடஒதுக்கீட்டுக் கொள்கை மற்றும் சலுகை, பலன்கள் வழங்கிடும் வழிமுறை என்பது பழங்குடியினரல்லாத பின்தங்கியவர் களல்லாத சமூகத்தவர்கள் தங்களது நியாயமான கோரிக்கைகளைப் பெறுவதிலிருந்து அவர்களைத் தடுக்கிறது என்ற ஐயப்பாட்டை பலரும் வெளியிடு கிறார்கள். இது தலித் மற்றும் தலித் அல்லாத மக்களிடையே பிளவினையை மேலும் அதிக மாக்குகிறது. தலித் மக்களுக்குள்ளேயே 'தலித் மேலடுக்கு வர்க்கம்' என்ற ஒரு பிரிவினர் உருவாகி வளர்ந்ததென்பது முதலாளித்துவத்தில் வர்க்கப் பிளவு ஒவ்வொரு கணமும் கூர்மைப்பட்டு வருவதற்கு சான்று பகர்கின்றது. இருப்பவன் இல்லாதவன் இவர்களுக்கிடையிலான பெரும் இடை வெளி மிகவும் தெள்ளத் தெளிவாக தெரிகிறது.

### இடஒதுக்கீடு : அரசியல்வாதிகள் தமது கையில் வைத்திருக்கும் சூழ்ச்சித்திட்டம்

இவ்வாறாக, எவ்விதமான பலன்தரும் வேலை வாய்ப்பு மற்றும் முறைசார்ந்த கல்வி பெறுவதற் கான வாய்ப்புகள் உழைக்கும் பரந்துபட்ட மக்கள் எட்டிப்பிடிக்கின்ற எல்லைக்குள் இல்லாத நிலை இருக்கின்றபொழுது ஆளும் வர்க்கம் மற்றும் அதன் அரசியல் மேனேஜர்களான கட்சிகள் இட ஒதுக்கிடு குறித்து தொடர்ந்து கூக்குரல் எழுப்பி – கோட்டா சிஸ்டத்தின் மூலமாக வேலைவாய்ப்பு மற்றும் கல்வி பெறும் கனவுகளை கட்டவிழ்த்து விடுகிறார்கள். இந்த செயல்முறைப்போக்கின் வழியாக அவர்கள் பல்வேறுபட்ட பகுதி மக்களி டையே மிக வஞ்சகமாக பரஸ்பரம் வெறுப்பையும் அவநம்பிக்கையையும் தூண்டிவிட்டு உழைக்கும் மக்களிடையே இருந்துவரும் ஒற்றுமை மற்றும் இணக்கத்தை சிதைக்கிறார்கள். கல்வி பெறுவதற்கும் வேலை பெறுவதற்கும் எவ்விதமான முகாந்திரமும் இல்லாத பொழுது, தலித்துகளுக்கு இடஒதுக்கீடு தருவதாலோ மறுப்பதாலோ என்ன மாற்றம் வந்து விடப்போகிறது? மனிதனிலும் கீழான வாழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள பரந்துபட்ட தலித் மக்களுக்கு இந்த இடஒதுக்கீட்டு இடங்கள் கிடைக்கக் கூடிய ஒன்றாக இருக்குமா? அல்லது இந்த ஒதுக்கப் பட்ட இடங்கள், அப்படியே என்றென்றைக்கும் காலியாக இருக்குமா அல்லது இந்த இடங்கள் மேலடுக்கு தலித் பகுதியினரால் நிரப்பப்படுமா? அதைப்போலவே தலித் அல்லாத ஏராளமான மாணவர்களின் பெற்றோர்கள் எத்தனை பேர் தங்களது குழந்தைகளை உயர்கல்விக்கே ஏன் இடைநிலைக் கல்விவரையிலும் கூட படிக்க வைக்கக்கூடிய நிலையில் வசதி பெற்றிருக்கிறார்கள்? எனவே இடஒதுக்கீடு வேண்டுமா வேண்டாமா என்பதல்ல விஷயம். ஒடுக்குமுறை முதலாளித்துவ சமூக அமைப்பினால் மிக வேகமாக வருமானம் குறைந்து வருவதால் ஏற்படும் பொருளாதார வறுமைநிலையே இதற்குக் காரணமாகும். இதுதான் தலித் மக்களுக்கும் தலித் அல்லாத பிறபகுதி மக்களுக்கும் ஒரு சேர கல்வி பரவுவதைத் தடுத்து வருகிறது. எனவே மிகச் சுலபமாக எந்த ஒரு சிந்திக்கும் திறன் பெற்ற மனிதனும் இந்த எளிமை யான விஷயத்தைப் புரிந்துகொள்ளமுடியும். அதாவது வேலையின்மைப் பிரச்சினை அல்லது கல்விபெறவியலாத பிரச்சினை போன்ற ஆழமான பிரச்சினைகளுக்கு இடஒதுக்கீடு காரணமல்ல தீர்வும் அல்ல என்பதைப் புரிந்துகொள்ள முடியும். நெருக்கடியில் சிக்கியிருக்கும் அழுகிய முதலாளித் துவ சமூக அமைப்புமுறைதான் மனித இனம் முழுமைக்குமான இயல்பான வளர்ச்சியையும் அதற்கான செயல்முறைப்போக்கையும் தடுத்திடும் தீங்குகளுக்கெல்லாம் மூலகாரணமாகும். ஆகவே, இவைபோன்ற வாழ்க்கையின் மிக இறுக்கமான பிரச்சினைகளைத் தடுத்துக் களைவதற்கான கேள்வியென்பது முதலாளித்துவ அமைப்புமுறை யினைத் தூக்கியெறியும் கேள்வியுடன் பிரிக்க வியலாதவாறு பிணைந்துள்ளது.

எனவே, தலித் மற்றும் தலித் அல்லாத துன் புற்றுவரும் மக்களிடத்தில் போதிய விழிப்புணர்வு வெளிச்சம் பரவி அவர்கள் ஆளும் முதலா ளித்துவ நிர்வாக இயந்திரம் மற்றும் அவர்களின் அடிவருடிகளால் தவறாக வழிநடத்தப்படுவதை சரியாகப் புரிந்துகொண்டு அனைத்துப் பிரி வினை எண்ணங்களுக்கும் எதிராகக் கிளர்ந் தெழுந்து, உயர்ந்த ஒழுக்கம் மற்றும் நீதி நெறி களின் அடிப்படையில் ஜனநாயக இயக்க மேடை களில் ஒன்றுபட்டு அவர்கள் வாழ்க்கையின் எரியும் பிரச்சினைகளுக்கான தீர்வை வலியுறுத்தி சமூக நீதிக்காகவும் தங்குதடையற்ற வேலைவாய்ப்பு மற்றும் கல்விக்காகவும் மிகவும் அலட்சியப் படுத்தப்பட்ட அடித்தட்டு தலித் மக்கள் தாங்கள் ஒரு சரிசமமான போட்டியில் பங்கெடுக்கும் திறன் பெற்றவராக வளரவும், காலங்காலமாக அவர்கள் சந்தித்துவரும் சமூகப் புறக்கணிப்பு என்ற கொடிய துன்பத்திலிருந்து மீள்வதற்காகவும் அவர்கள் போராட வேண்டும். அவ்வழியில் மட்டுமே படிப்படியாக முதலாளித்துவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வழியமைக்கமுடியும்.

முதலாளித்துவ எதிர்ப்புப் புரட்சியைப்பற்றிய பயஉணர்வால் பீடிக்கப்பட்டு இந்திய ஆளும் வர்க்கம் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கம், ஜாதியவாதம், வகுப்புவாதம், இனவாதம், குறுகிய வாதம் வெறிவாதம் மற்றும் இவைபோன்ற பிற பிரிவினை எண்ணங்களையும் தூபமிட்டு வளர்த்து உழைக்கும் மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்க தீவிரமாக முயன்று வருகிறது. பிரிட்டிஷ் ஏகாதி பத்தியம் இந்து முஸ்லீம் பிரிவினை எண்ணத்தை படிப்படியாகத் தூண்டிவிட்டும், பழங்குடியினர், பழங்குடியினர் அல்லாதவர்களிடையே பிரி வினையைத் தூண்டிவிட்டும் பிரித்தாளும் கொள்கை யினை மேற்கொண்டது. அதைப்போன்ற குறிக் கோளுடன் இந்திய பூர்ஷுவா வர்க்கம் சுதந்திரத் திற்குப் பிறகு மிக நுட்பமாக இவைபோன்ற ஜாதிய, வகுப்புவாத, பிரிவினைவாத, வெறிவாத சிந்தனை களைத் தூண்டிவிட்டு கவனத்துடன் வளர்த்து, சந்தர்ப்பம் வாய்க்கிறபோது வெறிவாத பிரிவினை எண்ணங்களைக் கிளர்த்திவிட்டு பல்வேறு சமூகங் களுக்கிடையில் இரத்தக்களரிகளை உருவாக்கவும் – அவர்கள் சகோதரச் சண்டைகளிலும் ஒருவரை ஒருவர் பலிவாங்கும் மோதல்களிலும் ஈடுபட்டு மடியும்படியும் சிக்கவைக்கப்படுகிறார்கள்.

மதிநுட்பமாக வடிவமைக்கப்பட்ட இந்த சதித் திட்டத்தை நிறைவேற்றுவதில், பூர்ஷுவா அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் இந்திய ஆளும் ஏகபோக வர்க்கத்தின் கையாட்களாக இருந்து வருகிறார்கள். ஆகவே மக்களைப் பிரித்துவைக்க அவர்களிடையே ஏறுக்குமாறான சிந்தனைகளை, வெறிஉணர்வுகளை ஊட்டிவளர்ப்பதில் அவர்கள் உற்சாகத்துடன் செயல்பட்டு வருகிறார்கள். இவ் வாறாக பல்வேறுபட்ட பகுதி உழைக்கும் வெகுஜனங் களிடையே பிரச்சினைகளை சாதுரியமாகக் கை யாண்டு தங்களது சொந்த வாக்குவங்கியை பாது காத்துத் தக்கவைத்துக் கொள்ள அவர்களால் முடிகிறது. தேர்தல் அரசியலில் தங்களது எதிர் காலத்தை உத்திரவாதப்படுத்தும் அதேநேரத்தில் அவர்களின் எஜமானர்களுக்குப் பணிந்து அவர் களின் வர்க்கத் தேவையை நிறைவேற்றவும் சேவை செய்யவும் முடிகிறது. போலிக் கம்யூனிஸ்ட் கட்சி களான சி பி ஐ (எம்), சி பி ஐ யும் கூட இந்த சூழ்ச்சி மிகுந்த பூர்ஷுவா இயந்திரத்திற்கு பங்காளர்களாக மாறி அதிகாரம் மற்றும் பதவி களுக்காக பூர்ஷுவா கட்சிகளின் இந்த அல்லது அந்த அணிகளின் கட்சிகளோடு வெட்கமற்ற கூட்டணிகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் அமைத்துக்கொண்டு தங்களின் அரசியல் நலனைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள். இதன் மூலம் ஜாதிய வகுப்புவாத துருவமயம் பெரும் அபாயத்துடன் வளர்ந்து பெருக அனுமதிக் கிறார்கள். ஒரு காலத்தில் பின்தங்கிய மக்களைக் கைதூக்கிவிடுவதற்கான ஒரு செயல்முறையாக கருதப்பட்ட கல்வி மற்றும் வேலையில் இட ஒதுக்கீடு என்ற கொள்கை, தற்பொழுது மென் மேலும் இந்தப் பிரிவினை தொடர்ந்து நிகழவும், அதற்கு ஒத்திசைந்து தூபமிடுவதற்கான ஒன் றாகவும், பிற்போக்கு சக்திகளின் கைகளில் ஒரு சூழ்ச்சித் திட்டமாகவும் மாறிவிட்டது.

### மனசாட்சி முற்றிலுமாக புதைக்கப்பட்டுவிடவில்லை

ஒரு காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிக் கெதிராய் ஜாதி, இன, மதம் இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு ஒன்றிணைந்து தீரத்துடன் போராடிய இந்திய மக்களிடத்தில் பிரிவினையும் பிரிவினை எண்ணங்களும் மிகத் தீவிரத்துடன் அதிகரித்துப் பரவியிருக்கின்ற தற்போதைய நிலைமை மிகவும் உரிய கவனத்துடன் உற்று நோக்க வேண்டிய ஒன்றாகும். இருப்பினும் மக்களை ஜாதிய – வகுப்புவாத இனவாத அடிப்படையில் வேண்டுமென்றே பிரித்துவைக்க பிற்போக்கு சக்திகளால் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன என்பதை தங்களின் சொந்த அனுபவங் களிலிருந்து சிந்தனையாழமிக்க பல நபர்களால் புரிந்து கொள்ள முடிந்திருக்கிறது என்பதை நாட்டின் பல பகுதிகளிலும் நாம் கண்ணுற்று வருகிறோம். அதோடு அவர்கள் அதற்கெதிரான தங்களின் எதிர்ப்பையும் பதிவுசெய்து வருகின்றார்கள்.

'ஷில்லாங் டைம்ஸ்' பத்திரிகையின் எடிட்டரும் விருதுபெற்ற பத்திரிக்கையாளருமான திருமதி பட்ரீசியா முகிம் இம்மாதிரியான சமூகப் பிரச்சினை களில் மிகுந்த நுட்பமான பார்வை கொண்ட ஆளுமைமிக்க நபர்களுள் ஒருவராகத் திகழ்கிறார். பெரும்பான்மையான பத்திரிகை எழுத்தாளர்கள் மற்றும் இதழியலாளர்கள் இந்த அமைப்பு முறைக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் எதிராக கருத்து வெளியிடப் பயந்து அல்லது தங்களின் வியாபார நலன் மற்றும் பிற முன்னுரிமைகளுக்கு ஆசைப்பட்டும், இதழியல் தர்மத்திற்கும் நெறிமுறை களுக்குப் பணிந்து உண்மையை வெளிக்கொனர விருப்பமின்றியும் இருந்துவரும் நிலையில், பிறப்பால் பழங்குடி இனத்தவரான 80 சதத்திலிருந்து 100 சதம் வரையில் இடஒதுக்கீடு அமலில் இருக்கும் மேகலாய மாநிலத்தைச் சேர்ந்தவரான இவர் இந்த உண்மைகளை பத்திரிகைகளில் வெளிக்கொண்டு வருவதில் அரிதானதொரு துணிச்சலை வெளிப் படுத்தியிருக்கிறார்.

கையளவு கொண்ட வசதிபடைத்த செல்வந்தர்கள் மற்றும் கோடிக்காணக்கான ஏழைகளுக்கிடையே ஏற்பட்டு வரும் பிளவு குறித்து தனது வேத னையை வெளியிடும் அவர், ''அளவிலும் ஆடம் பரத்திலும் பெரிய ஷாப்பிங் மால்கள் அதிகரித்து வரும் நம் நாட்டில் கையளவு செல்வந்தர்கள் ஒரு திருமணத்திற்காக பல நூறு கோடி ரூபாய்களை வாரியிறைத்து வெளிநாடுகளில் உல்லாசமாக விடுமுறையினை ஒரு புறத்தில் அனுபவித்துக் கொண்டிருக்க, மறுபுறத்தில் மிகப் பெரும்பான்மை யான பரந்துபட்ட மக்களுக்கு உலகமே அடைபட்டு இருண்டு கிடக்கிறது. வேலைவாய்ப்புகள் சுருங்கி வருகின்றன. அரசு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முகாந்திரங்களை ஏற்படுத்துவதில் தோல்வியடைந் திருக்கிறது. ஏனெனில், பொருளாதாரம் என்பது அவ்வாறான இலக்குநோக்கி செலுத்தப்பட வில்லை. மாறாக இது பொதுச் சொத்து மற்றும் ஆதாரங்களிலிருந்து தனியார்கள் செல்வம் குவிப்பதை நோக்கி செலுத்தப்படுகிறது. (ஸ்டேட்ஸ் மென் 17.02.2013).

இடஒதுக்கீட்டுக் கொள்கை தவறாகப் பயன் படுத்தப்படுவதைச் சுட்டிக்காட்டி அவர் ''இந்தியா தாழ்த்தப்பட்டவர்கள் (SC), பின்தங்கிய பழங்குடி மக்கள் (ST) மற்றும் பிற வகுப்பினர்களை, அவர் களின் ஒடுக்கப்பட்ட வாழ்நிலையிலிருந்து கை தூக்கிவிடுவதற்காக கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் மிகப்பெரும் அளவிற்கு வாய்ப்புகள் வழங்கிடும் நோக்கத்தின் பொருட்டு இட ஒதுக்கீட்டுக் கொள்கையினை ஏற்றுக்கொண்டது. ஆனால் அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டு நடைமுறைப்படுத்தத் துவங்கி 62 ஆண்டு களாக அமுலில் இருந்துவருகின்ற இந்தக் கொள்கை 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லப் பட்டிருப்பினும் இந்தக் கொள்கை வாக்குவங்கி அரசியலில் பலமாக வேறூன்றி இருப்பதால் இந்த நிகழ்கால ஏற்பாட்டை கலைப்பது அவ்வளவு சுலபமல்ல'', (ஸ்டேட்ஸ் மென் 17.02.2013)

'தலித் மேலடுக்கு வகுப்பினர்' உருவாகி இருப்பதுபற்றிக் குறிப்பிட்டுப்பேசிய அவர், நேர்மறை பாகுபாடு (Positive Discrimination) அல்லது அஃபர்மெட்டிவ் ஆக்ஷன் (அதாவது இட ஒதுக்கீடு) எந்த அளவிற்கு பங்காற்றியிருக்கின்றன என்பதுபற்றி எந்த ஒரு ஆய்விற்கும் இன்னும் வரவில்லை.

தொடர்ச்சி 5ம் பக்கம்

# வேலையின்மை கல்வியின்மை பிரச்சினைகளுக்கு இடஒதுக்கீடு காரணமுமல்ல தீர்வுமல்ல

4ம் பக்கம் தொடர்ச்சி

இது ஒரு சிலருக்கு மட்டுமே சாதகமாக சென்றிருக்கிறதா மற்றும் இது நலிந்த மற்றும் பிற்படுத்தப்பட்டோர் என்று அழைக்கப்படும் மக்களிடையே மற்றொரு வர்க்கத்தை உருவாக்கி இருக்கிறதா... அதே நேரத்தில், இதனால் (இட ஒதுக்கீட்டால்) பலன்பெற்ற வகுப்பினர், இதிலிருந்து எடுத்தெரியப்பட்டு பொதுவான குடிமக்களாக பாவிக்கப்படவேண்டும். இதே பிரிவினரில் (SC, ST) யாரெல்லாம் இதுவரையில் அரசின் உதவியைப் பெற்றிருக்கவில்லையோ அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கவேண்டும். அவ்வாறான நடவடிக்கைகளில் ஒன்றாக இந்த 'மேலடுக்கு தலித் வகுப்பினர்' வருமான வரி செலுத்திவிடுவது என்பது கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீட்டை விட்டுவிடுவது என்பதும் உள்ளடங்கும்.

பொருளாதாரப் பின்தங்கல் மட்டுமே அரசிடமிருந்து ஒருவர் உதவியைப் பெறுகின்ற பலனாளி என்பதைத் தீர்மானிக்கின்ற அளவு கோலாக இருக்கவேண்டும் என்பது குறித்து நிறைய சொல்லப்பட்டுவிட்டது. ஆனால் இந்த முன்மொழிவு குறித்து அக்கறை எடுத்துக் கொள்வதில் எவரும் சிரத்தையுடன் இல்லை. ஏனெனில் இதற்கு வாக்குவங்கி அரசியல்தான் மீண்டும் காரணமாகும். எனவே வாக்குவங்கி அரசியல்தான் எந்தவொரு நேர்மாறான அரசியல் மாற்றத்திற்கும் மிகப்பெரும் தடையாக இன்று இருந்துவருகின்றது. அனைத்து அரசியல் கட்சிகளும், சமூக அமைப்பு முறையில் எந்தஅளவிற்குக் கோளாறுகள் இருக்கின்றது மேலும் அது எவ்வாறு வெகுசிலருக்கு மட்டுமே சாதகமாக இருக்கின்றது என்பதை அறிந்திருக்கிறார்கள். ஆனால் யாரும் இந்தப் படிநிலை முறையை மாற்றுவதற்கு கொஞ்சமும் முன்வரவில்லை"

குறிப்பாக அவர் வட கிழக்குப்பிராந்தியத்தில் இந்த 'மேலடுக்கு தலித் வகுப்பினரினால்' எவ்வாறு நியாயமற்ற முன்னுரிமைகள் அனுபவித்து வரப்படுகின்றன என்பது குறித்து மிகவும் வெகுண்டெழுகிறார். அவருடைய வார்த்தையில் சொல்வதென்றால் ''பழங்குடி இனத்தவரில் அல்லது வடகிழக்குப் பிராந்தியத்தில் வசிப்பவர்கள் அரசியல் அமைப்புச் சட்டம் தரும் பாதுகாப்பின் பலனாக, பல்வேறுபட்ட முன்னுரிமைகளை அனுபவித்து வருகிறார்கள். அமைப்புச்சட்டத்தின் **6** வது சாசனத்தின்படி பழங்குடி இனத்தவர்கள் அனைத்து மத்திய அரசு நிறுவனங்களிலும் மற்றும் கல்வி நிறுவனங்களிலும் (குறிப்பாக மருத்துவம், பொறியியல்) **7.5** சதமான இடஒதுக்கீட்டினை அனுபவித்து வருகிறார்கள் இதே மாதிரியான சலுகைகளை எஸ் சி மற்றும் ஓ பி சி (SC and OBC) மக்கள் **15** சதமான அளவிற்கு பெற்றுவருகிறார்கள். இதில் உள்ள மேலடுக்கு பிரிவினராக உருவாகிவிட்டவர்கள் இந்த சலுகையினையும் வாய்ப்பு வசதிகளையும் தொடர்ந்து அனுபவித்து வருவதுடன் அவர்களின் எண்ணிக்கையும் உயர்கிறது. உண்மையில் இதுவரையில் இந்த முன்னுரிமைகள் இதுவரை கிடைக்கப்பெறாத மக்களுக்கே அவை சேரவேண்டும்......... இது தான் அவர் தமது சொந்த மக்கள் மீதே இழைக்கும் அநீதியாகும்.

பழங்குடி மக்கள் (ST) அனுபவித்துவரும் பலன்களில் ஒன்று வருமானவரி விலக்காகும். ஒரு ஐ ஏ எஸ் அதிகாரி அல்லது மருத்துவர் அல்லது என்ஜினியர் அவர் தலித் மற்றும் பழங்குடியினர் அல்லாத தனது சக பணியாளரைப்போல அவருக்கு இணையான ஊதியத்தை சம்பாதித்துவந்த போதிலும் அவர் தேசத்திற்குச் செலுத்த வேண்டிய வருமான வரியிலிருந்தும் அவரது வருமானத்தை ஆண்டு தோறும் பிறர் அறிய வெளியிடுவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டிருப்பது நியாயமற்றது. வடகிழக்கு மாநிலத்தின் அரசியல் மற்றும் வியாபார வகுப்பினர் மற்றும் அரசாங்க வேலையிலிருக்கின்ற என்ஜினியர்கள் மற்றும் அரசு நிர்வாக அதிகாரிகள் அவர்களின் அறியப்பட்ட வருமான ஆதாரத்தையும் மீறி பெருமளவு செல்வத்தைக் குவித்துவருகிறார்கள். ஆனால் அவர்கள் இந்த ஊழல் குற்றத்திலிருந்து தப்பித்து சுதந்திரமாக இருக்கிறார்கள். அரசாங்க உத்தியோகத்திலிருக்கிற இந்த என்ஜினியர்கள் எவ்வாறு இவ்வளவு அதிக அளவு வருமானத்தை ஈட்டமுடியும்? அவர்களின் குழந்தைகளுக்கு வெளிநாடுகளில் கல்வியளிக்க முடியும் என்பது குறித்து யாரும் கேள்வி எழுப்புவதே இல்லை. இது முன்னுரிமை பெற்ற வெகுசில இந்தியர்கள் மட்டுமே அனுபவிக்கமுடிந்த வாய்ப்பாகும்.

மேலும் இவர்கள் பிறப்பால் செல்வந்தர்களாகப் பிறக்கவில்லை என்பதையும் அவர்கள் தாங்கள் பணிபுரிந்த காலத்தில்தான் இச்செல்வத்தை ஈட்டினார்கள் என்பதையும் நாமறிவோம். இந்த என்ஜினியர்கள் கட்டுகின்ற பொதுக் கட்டிடங்களும், சாலைகளும் உறுதியற்று ஒவ்வொரு ஆண்டும் பழுது பார்க்கப்படவேண்டிய நிலைக்குச் சென்று கொண்டிருக்க அவர்கள் சம்பாதிக்கின்ற செல்வம் அதற்கு நேர்விகிதத்தில் உயர்ந்து பலமாகிக்கொண்டே செல்கிறது. இவையனைத்தும் பணம் சம்பாதிக்கின்ற மோசடி வழிகள் தான் ஆனால் அவர்கள் பழங்குடி இனத்தவராக இருப்பதால் சுதந்திரமாக விடப்படுகிறார்கள். ஆனால் இந்த வாய்ப்புகளும் ஆதாரங்களும் எல்லா பழங்குடியினருக்கும் சமமாக வழங்கப்படுவதில்லை. பலரின் அரசியல் அதிகார அந்தஸ்த்து மற்றும் கொள்கை முடிவுகளை எடுப்பதில் செல்வாக்குச் செலுத்துமளவிற்கான அவர்களின் சமூக அந்தஸ்த்து இவற்றால் சில பழங்குடி இனத்தவர்கள் மற்றவர்களை விடவும் பலமடங்கு செல்வந்தர்களாக இருக்கிறார்கள். ஜார்கண்ட் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் மதுகோடா தனக்கு சாதகமான நிறுவனத்திற்கு சட்டவிரோதமாக சுரங்கம் தோண்டும் உரிமம் வழங்கியதன் மூலமாக **6,000** கோடி ரூபாய் அளவிற்கு சொத்துக் குவிக்க முடிந்திருக்கிறது... மற்ற எல்லா மனிதர்களின் தார்மீக நெறிசார்ந்த டி என் ஏ (மரபனு)வில் ஊழல் பதிவுறுவாக்கம் செய்யப்பட்டிருப்பதைப்போலவே இவர்களிடமும் அது பதிவாகியிருக்கிறது. எஸ் சி, எஸ் டி மற்றும் ஓ பி சி வகுப்பைச் சார்ந்தவர்களும் மனிதர்கள் தானே! (ஸ்டேட்ஸ் மென் **03–02–2013**).

கல்வி மற்றும் பிற விஷயங்களில் ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்குமிடையில் இருந்து வருகின்ற பாகுபாடு குறித்து ஆராயும்போது அவர், ''கல்வி மறுக்கப்பட்ட மக்கள் ஏழைகளாக இருக்கிறார்கள், சாதாரண ஏழை மக்கள்வாழும் பகுதிகளில் மக்கள் நெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க எல்லாவகையான நெருக்கடிகளும், சிரமங்களும் ஏமாற்றங்களும் அதிகரித்து வருகின்றன. அவர்களுக்கு சரியான சுகாதார மருத்துவ வசதிகள் இல்லை. பிள்ளைப்பேறு வேண்டுமா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும் உரிமையும்கூட பெண்களுக்கு மறுக்கப்படுகிறது. குடும்பம் பெரிதாகிறது. ஆனால் நடுத்தர மற்றும் மேல்தட்டு வர்க்கத்தினர் கல்வியின் பலனை அனுபவித்து அதனை தங்களது அடுத்த தலைமுறைக்கும் கடத்துகிறார்கள். ஏனெனில் கல்வி அவர்களின் பலன்களை அதிகரிக்கும் என்பதை அவர்கள் அறிவர். இதன் விளைவு நல்ல சம்பாத்தியமுள்ள வேலை, வசதியான இடத்தில் திருமணம் இன்னபிறவும் அவர்களுக்கு வாய்க்கிறது. இதுதான் உயர்தட்டு மக்கள் எவ்வாறு தங்களின் அந்தஸ்த்தினை தக்கவைத்துப் பராமரிக்கிறார்கள் என்பதற்கான உதாரணமாகும். இந்த நிகழ்வுப்போக்கு வடகிழக்குப் பகுதி பழங்குடி மக்களிடையேயும் காணப்படுகிறது. **1970**களின் பிற்பகுதிகளில் துவங்கி இன்றுவரையிலும் இது தொடர்ந்து வருகிறது. கண்மூடித்தனமான இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் தொடர்ந்த அமுலாக்கம் வடகிழக்குப் பிராந்திய பழங்குடி மக்களிடையே ஏற்கனவே பெரும் தீங்கை விளைவித்துவிட்டது. அதன் திசைவழியை முற்றிலும் மாற்றுவதற்கு இதுவே தருணமாகும்.

### தெளிந்த சிந்தனை

மேலும் ஒரு படி மேலே சென்று அவர் எந்த ஒரு தயக்கமுமின்றி ''வறுமை என்பது வெறுமனே கிராமப்புறத்தின் ஒரு நிகழ்வுப்போக்கு அல்ல" நாட்டின் தலைநகரின் மையத்திலேயே பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் வீடில்லா தவர்களாக வீதியில் வாழ்ந்துவருகிறார்கள். அவர்களுக்கான வாய்ப்புகள் எங்கே? மற்றும் அவர்கள் நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரிவிலிருந்து வந்தவர்களல்லர், அவர்கள் எல்லா வர்க்கத்தையும் மற்றும் ஜாதியையும் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். நிலைமை இவ்வாறிருக்க, எவ்வாறு அரசானது பொருளாதார சமத்துவத்தினை கொண்டுவரப்போகிறது? ஏராளமாக ஏழை

தொடர்ச்சி 8ம் பக்கம்

# தேசிய அடையாள அட்டை அல்லது ஆதார் திட்டம்...

2ம் பக்கம் தொடர்ச்சி

தகவல்கள் என்பனவாகும். டெமாக்ரஃபி எனப்படுபவை பெயர், முகவரி, வயது, பாலினம், மரபினம் (Ehoricity), மதம், கல்வித்தகுதி, திருமண நிலை, தொழில் போன்றவையாகும். **10** விரல்களின் ரேகை அச்சு, கரு விழி ஸ்கேன், முகத்தின் புகைப்படம் ஆகியவை பயோமெட்ரிக் தகவல்களில் அடங்கும்.

இவ்வாறாக, உடல்ரீதியாக மனிதர்களை தனித்தன்மையோடு அடையாளம் காண்பதற்கும் அவர்களை தேடி கண்டுபிடிப்பதற்கும், அதாவது அந்நபரை கண்காணிப்பதற்கும், ஏற்ற வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக இதற்கு வக்காலத்து வாங்குவோர் கூறுகின்றனர். தகவல்களை சேகரிப்பதற்கு மாநில அரசாங்கங்களையும், இந்தியா முழுதும் உள்ள ஏஜென்சிக்களான தபால் நிலையங்கள், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, ஆயுள் காப்பீட்டு நிறுவனம் ஆகியவற்றை பதிவாளர்களாக தேசிய அடையாள அட்டை ஆணையம் நியமித்துள்ளது. இந்தப் பதிவாளர்கள் இப்பணியை மேற்கொள்வதற்கு தனியார் நிறுவனங்களை நியமித்துக் கொள்ளலாம். தனியார் ஏஜென்சிகளை நியமிப்பதற்கு எவ்வித நிபந்தனை வரம்புகளும் கிடையாது.

இவையனைத்தும் நம் நாட்டில் எந்த அளவிற்கு சாத்தியமாகும்? உதாரணத்திற்கு, முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு அவசியமான பிறந்த தேதியை எடுத்துக் கொள்வோம். பெரும்பாலான இந்தியர்களுக்கு சரிபார்க்கக்கூடிய பிறப்புச் சான்று கிடையாது என்பதை அனைவரும் அறிவோம். படித்த மக்கள் தவிர ஏனைய அனைவருக்கும் ஒன்றுக்கும் மேற்பட்ட பெயர்கள் கொண்டிருப்பர். வீடற்ற மக்களுக்கு முகவரிச் சான்று பெறுவது மற்றொரு பிரச்சினையாகும். முகவரி இன்றியேகூட ஒருவரது தனித்தன்மை அடையாளத்தை ஆதார் அட்டை அங்கீகரிக்கும் என்றாலும், வங்கிப்பணிகள் போன்ற சேவைகள் பெறுவதற்கு முகவரி அவசியமாகும். லட்சக்கணக்கான வீடற்ற மக்களின் கதி என்ன? அவர்கள் எந்த முகவரியை கொடுப்பர்? இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி செல்லுபடியாகக் கூடிய ஆதாரங்களை கொண்ட ஒருவர் முகவரிச் சான்று இல்லாத ஒருவரை அறிமுகப்படுத்தி சேவைகளை பெறுவதற்கு வழிவகை செய்யக்கூடிய 'அறிமுகம் செய்பவர் முறைமை' என்பதே அது. ஆனால் இம்முறைமையும் எதிர்பார்த்தது போலவே முறைகேடுகளுக்கு ஆளானது.

இந்தோ–குளோபல் சோஷியல் சர்வீஸ் சொசைட்டி என்ற அரசு சாரா தொண்டு நிறுவனத்தின் முகவரியில் ஏராளமான வீடற்ற மக்கள் பதிவு செய்திருப்பதை அறிந்த அத்தொண்டு நிறுவனம் தேசிய அடையாள அட்டை சேர்க்கையை நிறுத்தி வைத்துள்ளது. தனிநபரின் தனிப்பட்ட விவரங்களை சேகரிப்பதற்கு தனியார் நிறுவனங்களை ஈடுபடுத்துவதில் இன்னும்பல ஆபத்துகள் உள்ளன. இத்தனியார் நிறுவனங்கள் அரசாங்கத்தின் அனுமதியின்றி இவ்வேலையை பிறருக்கு உப கான்ட்ராக்ட்க்கு விடுவதாக கூறப்படுகிறது. தேவையான தகவல்களைக் காட்டிலும் அதிகமான பிற தகவல்களையும் சேர்த்து சில நிறுவனங்கள் சேகரிப்பதாகவும் செய்திகள் வெளியாகின்றன. எந்தெந்த விவரங்கள் அவசியம் தெரிவிக்க வேண்டியவை, எவையெல்லாம் தனி நபர் விருப்பத்தை பொறுத்து தெரிவிக்கலாம் என்ற விவரத்தை இந்நிறுவனங்கள் தெளிவாக எடுத்துரைப்பதில்லை. இதற்கான படிவத்தில், அவசியமாக அளிக்க வேண்டிய தகவல்கள் என **5** கட்டங்கள் மட்டுமே இருக்கையில் குறைந்தது **19** கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும் என மனுதாரர்கள் கர்நாடகத்தில் கோரப்பட்டனர்.

தொடர்ச்சி 6ம் பக்கம்

# தீய நோக்கத்துடன் ஆதார் தனிநபர் விவரங்களை துஷ்பிரயோகம் செய்ய மாட்டார்கள் என்பதை மறுப்பதற்கில்லை

5ம் பக்கம் தொடர்ச்சி

இவ்வாறாக, சிறிய அளவிலான தகவல்களை சேகரிப்பதற்கு தேசிய அடையாள அட்டை ஆணையம் நினைத்தபோதிலும், அவசியத்திற்கும் அதிகமான தகவல்கள் பதிவேடுகளில் (Records) இடம் பெறுவதற்கான சாத்தியங்கள் உள்ளன. பதிவேடுகளை வைத்திருப்பவருக்கு தெரியாமலேயே இத்தகவல்கள் அவற்றில் இடம்பெறக்கூடும். இவ்வாறு தகவல் சேரிக்கும் ஏஜென்சிகள் சில மதவாத அல்லது அடிப்படைவாத அமைப்புகளுடன் தொடர்பு கொண்டிருக்கக்கூடும் என்பதையோ அவசியமற்ற தகவல்களை சேகரிப்பதற்கு தீய உள்நோக்கம் இருக்கலாம் என்பதையோ மறுப்பதற்கில்லை.

அரசின் கண்களுக்கு புலப்படாமல் வாழ்கிறார்கள். அவர்களது குடிசை குடியிருப்பைக்கூட இடித்துத்தள்ளி அவர்களை புலம்பெயரச்செய்ய அரசு முயற்சிக்கும் என்ற நீங்காத பயத்திலேயே அவர்கள் எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் வாழும் காட்டு வாழ் மக்கள் கூட இதே நிலையில் தான் வாழ்கிறார்கள். இவர்களும் இந்திய குடிமக்கள்தான் என்றபோதிலும் இத்திட்டத்திலிருந்து அவர்கள் பெயர் விடுபடக்கூடும்.

அடையாளத்தை நிரூபிப்பதற்கு பயோமெட்ரிக் முறையில் உள்ள குறைபாடுகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. விரல் ரேகை அச்சுகளை ஒப்பிடுவதில் ஏற்படும் தவறுகள் மிகச் சொற்பம் என்று ஒதுக்கி விடலாமா அல்லது தவறுகளே ஏற்படாதா என்பதற்கு மிகச்சரியான தகவல்கள் இல்லை. பயோமெட்ரிக் கருவிகளை சப்ளை செய்வதற்காக தேசிய அடையாள அட்டை ஆணையத்தால் கான்ட்ராக்ட் செய்யப்பட்டுள்ள 4G ஐடென்டிடி சொல்யூஷன்ஸ் என்ற நிறுவனம் அளித்துள்ள அறிக்கை ஒன்றில் "பெரும் எண்ணிக்கையிலான மக்கள் உடல் உழைப்பையே சார்ந்துள்ள இந்தியா போன்றதொரு நாட்டில் 15 சதவிகித மக்கள் தங்களை ஆதார் அட்டையில் இணைத்துக் கொள்ளத் தவறுவர் என்பதையே அனுபவம் கூறுகிறது" என்று குறிப்பிட்டுள்ளது. 15 சதவிகிதம் நபர்கள் தவறுவர் எனில் ஏறக்குறைய 20 கோடி மக்கள் இதுபோன்ற திட்டங்களிலிருந்து நிரந்தரமாக விலகி நிற்பர்.

ரேஷன் கடைகளிலும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்ட வேலைகள் நடைபெறும் இடங்களிலும் விரல் ரேகை சரிபார்ப்பு கருவிகள் பொருத்தப்படுமானால், சரியான அடையாளத்தின் அடிப்படையில் வேலை வாய்ப்பும் பொருள் வாங்குதலும் கட்டாயமாக்கப்படுமானால் 20 கோடி மக்கள் இத்திட்டங்களின் பயன்களை பெறுவதிலிருந்து நிரந்தரமாக புறக்கணிக்கப்படுவர். இவ்வாறு நடக்குமாயின் அரசின் திட்டங்களிலிருந்து இதுவரை விலக்கப்பட்டவர்களை தேசிய அடையாள அட்டையை உள்ளடக்குமாயின், அது தன் பங்கிற்கு புதிய வடிவிலான விலக்கல்களை உருவாக்கும். 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோரும் தங்கள் விரல் ரேகைகள் நம்பத்தகாத உடற்கூறு அளவுகளாக (Undependable Biometrics) இருப்பதைக் காண்பர்.

### தேசிய அடையாள அட்டை

இந்தத் திட்டம் "தொழில்நுட்பத்தில் முழுக்க முழுக்க நிச்சயமற்ற தன்மையுடையது. ஏனெனில் சிக்கலான இத்திட்டம் பரிசோதிக்கப்படாத, நம்பகமற்ற தொழில்நுட்பத்தைக் கொண்டும் பல்வேறு அனுமானங்களைக் கொண்டும் வடிவமைக்கப் பட்டுள்ளது" என பாராளுமன்ற நிலைக்குழுவும் கூட கருத்து தெரிவித்துள்ளது. விரல்ரேகைகளை பதிவு செய்வது, குறிப்பாக உடலுழைப்பு தொழிலாளர்களின் விரல்ரேகைகளை பதிவு செய்வது மிகவும் சவாலான விஷயம், என்றும் கடின உடலுழைப்பால் தேய்வுற்று முரடாகிப் போன கைவிரல் அவ்வாறு பதிவு செய்யப்படும் போது, ரேகைகளின் பதிவு தரக்குறைவாக இருக்கும் என்றும் ஆணைய டைரக்டர் ஜெனரலே ஒப்புக்கொண்டுள்ளார். பயோமெட்ரிக்ஸை டூப்ளிகேட் செய்ய முடியாது என்று கூறப்படுவது நம்பத்தகுந்த ஒன்றல்ல என்பதால் பயோமெட்ரிக்ஸை பயன்படுத்தி அடையாள திருட்டை முற்றிலும் ஒழித்துவிட முடியும் என்பது நிரூபணமாகவில்லை.

இது சம்பந்தமாக மற்றொரு விஷயத்தையும் குறிப்பிட வேண்டும். அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி உள்ளிட்ட பல நாடுகள் இதுபோன்ற திட்டங்கள் நடைமுறை சாத்தியமில்லை என்று கூறி பாதியில் கைவிட்டு விட்டன. ஆட்களை பின்தொடர்ந்து சென்று வேவு பார்க்கும் பழக்கம் நிறைந்த அமெரிக்கா ஃபெடரல் சட்டம் ஒன்றை இயற்றியது. இச் சட்டத்தின்படி உள்நாட்டு பாதுகாப்புக்கான மத்தியத் (ஃபெடரல்) துறைக்கு மாநில அரசின் வசமுள்ள தகவல்கான ஓட்டுநர் உரிமம் மோட்டார் வாகன பதிவுச்சான்று போன்ற தகவல் விவரங்கள் கிடைக்கச் செய்ய வேண்டும். ஆனால் இச்சட்டத்தை அமுல் படுத்த தவறிவிட்டது. 'தேசிய அடையாள திட்டத்தை' கைவிடுகையில் இத்திட்டத்திற்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்ட தொழில்நுட்பமானது பரிசோதிக்கப்படாதது, நம்பகத்தன்மையற்றது என்று இங்கிலாந்து (UK) அரசாங்கம் தெரிவித்தது. இந்தியாவில் திட்டமிடப்பட்டுள்ள அளவிற்கு உலகில் வேறு எங்கும் எந்தவொரு திட்டமும் தீட்டப்பட்டு அமல்படுத்தப்படவில்லை.

தேசிய அடையாள அட்டை திட்டம் தொடர்பாக எழுகின்ற மற்றொரு அச்சம் யாதெனில் அடக்குமுறை அரசு இயந்திரம் தனிநபரின் தனிப்பட்ட வாழ்வில் ஊடுருவும் என்பதாகும். தேசிய அடையாள அட்டை திட்டம் நடைமுறைக்கு வந்து விட்டால் எந்தவொரு தனிநபரையும் எங்கேயென கண்டறிந்து அவரை கண்காணிக்க முடியும் என்று அஞ்சப்படுகிறது. சர்வதேச மாநாட்டு தீர்மானத்தின் படி இந்தியாவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் யதேச்சாதிகார வகையில் அல்லது சட்டத்திற்கு புறம்பான வகையில் அரசின் குறுக்கீட்டிலிருந்து தனிநபரின் சொந்த வாழ்வுக்கான (Privacy) உரிமை பாதுகாக்கப் பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 21ன்கீழ் தனி நபரின் சொந்த வாழ்வு பற்றிய ரகசியம் காக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளதாக உச்சநீதிமன்றம்கூட தெரிவித்துள்ளது. (ராஜ கோபால் Vs தமிழ்நாடு அரசாங்கம், 1994 மற்றும் பி யு சி எல் Vsஇந்திய அரசாங்கம், 1996). தனிநபரின் சொந்த வாழ்வில் குறுக்கிடுவதாக கூறி பயோமெட்ரிக் அடிப்படையிலான தேசிய அடையாள திட்டத்திற்கு பிலிப்பைன்ஸ் உச்ச நீதிமன்றம் தடை விதித்தது. சொந்த வாழ்க்கைக்கான உரிமை மற்றும் குடிமக்கள் உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்ட வழக்கு ஒன்றில் மனித உரிமைக்கான ஐரோப்பிய நீதி மன்றத்தில் 17 நீதிபதிகள் ஒருமித்த முடிவை வெளியிட்டனர். குற்றவாளிகள் என சந்தேகிக்கப்பட்ட ஆனால் தண்டிக்கப்படாதவர்களின் விரல் ரேகைகள், உடல் செல்கள் தொகுப்பின் மாதிரிகள், டிஎன்ஏ எனப்படும் மரபுக்கூறு விவரங்கள் ஆகியவற்றை வைத்திருப்பதற்கு கட்டுப்பாடற்ற எல்லையற்ற அதிகாரம் வழங்குவதென்பது பொதுநலனுக்கும் சொந்த நலனுக்குமான போட்டியில் சமத்துவ தன்மையை மறுப்பதாகும் என 17 நீதிபதிகளும் கருத்து தெரிவித்தனர்.

### மக்கள் இயக்கங்களை நசுக்குவதற்கு ஆதார் திட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கான சாத்தியம்

நீதிமன்ற கருத்துக்களும் தீர்ப்புகளும் இவ்வாறாக இருக்கையில் நிடாய் (NIDAI - இந்திய தேசிய அடையாள அட்டை ஆணையம்) மசோதாவின் 33வது பிரிவு, ஏற்கனவே நியமிக்கப்பட்டுவிட்ட அதிகார அமைப்பிடு நீதிமன்ற ஆணையின்படியோ அல்லது "தேச பாதுகாப்பு" பற்றிய கேள்வி எழுகையில் இணைச் செயலாளருக்கு குறையாக பதவியிலுள்ள அதிகாரியின் ஆணைப்படியோ தனிநபர்களின் சொந்த விவரங்களை வெளியிடலாம் என்று அதிகாரம் அளிக்கிறது. அதே சமயம், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், உதாரணத்திற்கு தேசிய அடையாள அட்டை அதிகாரிகள் தனிநபர் தகவல்களை துஷ்பிரயோகம் செய்யும்பட்சத்தில் அவர்களுக்கு தண்டனை வழங்குதல் பற்றி இந்த மசோதா மௌனம் காக்கிறது. கெட்ட நோக்கத்தோடு அதிகார துஷ்பிரயோகம் செய்வது, அரசியல் எதிரிகளை வேவு பார்ப்பது அடிப்படை மனித உரிமைகளை மறுப்பது, ஜனநாயக வெகுஜன இயக்கங்களின் செயல்வீரர்களை கொடுமைப்படுத்துவது, இவ் வியக்கங்களின் மையமாக உள்ள தலைவர்களுக்கும் அமைப்பாளர்களுக்கும் தொடர்ந்து தொந்தரவு தருவது இன்னும் இதுபோன்ற பல்வேறு ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபடுவது போன்றவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கையில் தேசிய அடையாள அட்டை ஆணையம் போன்ற மைய ஏஜென்சிக்கு இதுபோன்ற அதிகாரம் வழங்குவது கொடுங்கோன்மையானதும் யதேச்சாதிகாரமானதும் ஆகும்.

1984ம் ஆண்டில் டெல்லியிலும் 2002ம் ஆண்டு குஜராத்திலும் நடத்தப்பட்ட இனப்படுகொலைகளில் ஒட்டுமொத்த அரசாங்க இயந்திரமும் ஈடுபட்டது அனைவரும் அறிந்ததே. "என்கௌண்டர் கொலைகள்" காவல் நிலைய பாதுகாப்பில் மரணங்கள் போன்றவற்றுக்கு அரசாங்கம் மறைமுக அனுமதி அளிப்பதும் அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதற்காக போலீஸ் – இராணுவத்திற்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வதும் நிஜமே. அரசியல் எதிரிகளை கண்காணிப்பதற்கு முதலாளித்துவ அரசாங்கம் பல வழிமுறைகளை கையாள்வது உண்மை. ஆனாலும், ஆதார் திட்டம் நடைமுறைக்கு வந்தபின், ரயில் டிக்கட் முன்பதிவு செய்வது, ஏ டி எம் இயந்திரங்களிலிருந்து பணம் எடுப்பது உணவு மானியத் தொகையை வங்கிக் கணக்கில் சேர்ப்பது என அனைத்து செயல்பாடுகளும் இத் திட்டத்தோடு இணைக்கப்பட்ட பின் தனிநபர்களை கண்காணிப்பது ஆதார் திட்டத்தோடு இணைக்கப் படுமானால் இக்கண்காணிப்பு மிகச் சுலபமாகிவிடும்.

இத்தகைய திட்டங்கள் கொடுங்கோன்மை ஆட்சியாளர்களாலும் பாசிச சக்திகளாலும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதற்கு சரித்திரம் சான்று பகரும். 1933ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஐ பி எம் (IBM) ஹொல்லரித் டி-II அட்டை பிரித்தல் இயந்திரத்தை ஜெர்மன் ஆட்சியாளர்கள் பயன்படுத்தினர். மரபினம் மற்றும் இனத்தை அடையாளம் காட்டுவதற்கான வசதி இந்த இயந்திரத்திலும் அட்டையிலும் இருந்ததால் அதைக் கொண்டு யூதர்களை தங்கள் வசதிக்கேற்ப கணக்கிட்டு அடையாளம் கண்டு இனவெறி காரணமாக அவர்களை மிருகத்தனமாக கொன்று குவித்தனர். ஆகவே, மதம், இனம், ஜாதி, அரசியல் சார்பு போன்ற தனிப்பட்ட விவரங்களை ஆதார் திட்ட விவரங்களிலிருந்து தெரிந்துகொண்டு அதிகாரத்தில் உள்ள நபர்கள் துஷ்பிரயோகம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதை மறுக்க முடியாது. இத்தகவல்களை கைவரப்பெற்ற ஒருவர் தனிநபரின் உயிர் அல்லது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் ஜனநாயக விரோத, சட்ட விரோத தார்மீக நெறிகளுக்கு புறம்பான வகையில் இத்தகவல்களை துஷ்பிரயோகம் செய்யக்கூடும்.

தவறான நபர்களின் கைகளில் ஆதார் விவரங்கள் சிக்குவதையும் தங்கள் சுயநலத்திற்காகவும் இந்திய மக்களின் நலன்களுக்கு விரோதமாகவும் பொறுப்பற்ற அரசியல்வாதிகளால் இத்தகவல்கள் உபயோகிக்கப்படுவதையும் எவ்வாறு தடுப்பீர்கள் என்று கேட்டபோது ஆதார் எண்ணை எங்கேனும் பச்சை குத்தி வைத்துக் கொள்ளுங்கள், இல்லாவிட்டால் அதை மறந்துவிடுவீர்கள் என்றெல்லாம் இத்திட்டத்தின் இயக்குநரான நந்தன் நீல்கானி எள்ளி நகையாடினார். அவர் எரிச்சலில் சங்கடப்பட்டு நெளிந்தது நன்கு தெரிந்தது. தகவல் விவரங்களில் தனிநபர் ப்ரொஃபைல் வசதிகள் இருக்காது என்று அவர் கூறினார். அவ்வாறாயின், வறுமை கோட்டிற்கு கீழும் இதர பின்தங்கிய பிரிவிலும் வாழ்கின்ற நபர்களுக்கு அரசாங்கத்தின் நலத்திட்ட பலன்கள் சென்றடைவதற்கு ஆதார் விவரங்களை எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்று பேட்டி கண்டவர் கேட்டபோது நீல்கானியை "இச்சேவைகளை வழங்கும் மனுதாரர்களின் பொறுப்பு அது" என்று மழுப்பலாக பதிலளித்தார். அதோடு அவசர அவசரமாக "இவையெல்லாம் நியாயமான கவலைகள்தான். இவற்றை மக்கள் முன்பு பகிரங்கமாகவும் சட்டரீதியாகவும் நாங்கள் தீர்க்க வேண்டும்" என்றும் கூறினார். ('தி ஹிந்து' ஆங்கில நாளிதழில் 2009ம் ஆண்டு வெளியான 'நீல்கானியுடனான கரன் தாப்பரின் நேர்காணல்).

பொது அரங்குகளில் தொடர்ந்து விவாதிக்கப் பட்டுக் கொண்டிருக்கும் போதினும் தேசிய அடையாள அட்டைத் திட்டத்திற்கான செலவுகள், அதன் பலன்கள், அதிலுள்ள அபாயங்கள் சம்பந்தப்பட்ட கேள்விகள் தொடர்ந்து எழுப்பப்படும் போதினும் நந்தன் நீல்கானியும் அரசாங்கமும் கேள்விக் குள்ளாக்கப்பட்ட விஷயங்கள் குறித்து தொடர்ந்து மௌனம் சாதிக்கின்றனர். நாட்டில் சுரண்டலும்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# நாடு தழுவிய அளவில் ஒருமித்த கருத்து எட்டப்படும் வரை ஆதார் திட்டத்தை நிறுத்த வேண்டும்

6ம் பக்கம் தொடர்ச்சி

அடக்குமுறையும் உக்கிரப்பட்டுக் கொண்டிருக் கையில் இவற்றுக்கெதிராக மக்கள் பேரெழுச்சியுடன் போராடி வருகையில் ஸ்திரப்பட்டுவரும் மக்கள் இயக்கங்களை நசுக்குவதற்கு அரசாங்கத்திற்கு ஆதார் திட்டம் உதவிகரமாக இருக்குமோ என்று அஞ்சுவதற்கு இடமுள்ளது.

### நடைமுறையில் கட்டாயமாகும் ஆதார் திட்டம்

இதையெல்லாம் மூடிமறைப்பதற்காக ஆதார் திட்டத்தில் பங்கேற்பது கட்டாயமல்ல, மாறாக அது தானாக முன்வந்து இணைய வேண்டிய ஒன்று என்றும் அது அவரவர் விருப்பத்தை பொறுத்தது என்றும் நம்பவைக்க முயற்சிக்கப்படுகிறது. அமெரிக்காவில் உள்ள சமூக பாதுகாப்பு எண் (சோஷியல் செக்யூரிட்டி எண் SSN) போன்றதே ஆதார் எண் என்ற மாயை ஏற்படுத்தப்படுகிறது. உண்மையை மறைக்கும் மற்றொரு முயற்சியே இது.

சமூக பாதுகாப்பு பலன்களை வழங்குவதை எளிமைப்படுத்துவதற்காக 1936ம் ஆண்டில் அமெரிக்காவில் எஸ் எஸ் எண் அறிமுகப்படுத்தப் பட்டது. இந்த எஸ் எஸ் எண்ணின் முக்கியமான அம்சம் யாதெனில் 1974ம் ஆண்டின் பிரைவஸி சட்டத்தினால் இது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் சமூக பாதுகாப்பு எண்ணை வெளியிட மறுத்தார் என்ற ஒரே காரணத்திற்காக சட்டபூர்வமாக ஒருவருக்கு வழங்கப்படும் உரிமைகள், பயன்கள் அல்லது சலுகைகளை எந்தவொரு அரசாங்க நிறுவனம் வழங்க மறுக்குமாயின் அது சட்ட விரோத செயலாகும்" என்று தெளிவாக கூறுகிறது. மேலும், இந்த எஸ் எஸ் எண் மூன்றாம் நபருக்கு தெரிவிப் பதற்கு முன்பு ஃபெடரல் ஏஜென்சிக்கள் சம்பந்தப் பட்ட நபர்களுக்கு இதற்கான நோட்டீஸ் வழங்கி அவர்களது ஒப்புதலை பெறவேண்டும்.

இதற்கு மாறாக, இந்தியாவின் ஆதார் திட்டத்தை உள்துறை அமைச்சகத்தின் தேசிய மக்கள் தொகை பதிவேட்டுடன் (National Population Register - NPR என் பி ஆர்) ஒருங்கிணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த என் பி ஆர் என்பது குடியுரிமை சட்டம் 1955 மற்றும் குடியுரிமை (குடிமக்கள் பதிவு மற்றும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கல்) விதிகள், 2003 ஆகிய சட்ட ஷரத்துக்களின்படி லோக்கல் (கிராம, துணை நகர) அளவில், 2ம் மாவட்ட அளவில் மாவட்ட, மாநில, தேசிய அளவுகளில் தயாரிக்கப்படும் சாதாரணமாக இந்தியாவில் குடியிருப்போர் பட்டியலை கொண்ட பதிவேடாகும். "என் பி ஆர் க்காக சேகரிக்கப்படும் தகவல்களை யு ஐ டி (UID) அத்தாரிட்டி (Authority) எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும். குடியுரிமை விதிகள் 2003ன் விதி எண் 3(3)ன்படி இந்திய குடிமக்களின் தேசிய பதிவேட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகன் பற்றிய தகவல்களில் அவரது தேசிய அடையாள எண் கட்டாயமாக குறிப்பிடப்படவேண்டும்" என்று இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு வலைத்தளத் திலிருந்து தெரிகிறது. மேலும் இச்சட்டத்தின் விதி எண் 7(3) "குடிமக்கள் பதிவுக்கான லோக்கல் ரெஜிஸ்ட்ராரிடம் தம்மை பதிவு செய்துகொண்டு தங்களது சொந்த விவரங்களை சரியாக வழங்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் பொறுப் பாகும்" என்று கூறுகிறது. எனவே, என் பி ஆர் பதிவு கட்டாயமானது என்பது தெரிகிறது. அதே போல், ஆதார் எண்ணும் இதோடு இணைக்கப் பட்டுள்ளதால் ஆதாரில் இணைவதும் கட்டாய மாகும் என்பதை புரிந்துகொள்ள முடியும்.

எனவே, இத்திட்டம் ஏழைகள் பயன்பெறுவதற் காக வென்று மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என எளிதாக எடுத்துக் கொள்ள முடியாது. மாறாக, பரந்துபட்ட உள்நோக்கம் கொண்ட வேறு ஏதோ ஒரு இலக்கை நோக்கிய நடவடிக்கைகள் எனக் கருதுவதற்கு இடமுள்ளது.

### அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் சுயநலம்

இத்திட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் காட்டும் அக்கறைதான் நம்மை மிகுந்த கவலைக்குள்ளாக்குகிறது. பயோமெட்ரிக் அடையாள அட்டை தொழில்நுட்பத்தை இராணுவம், சட்ட அமலாக்கம், தனியார் துறைகளில் உபயோகிப் பதற்கு எவ்வாறு திட்டமிட்டுள்ளது என்றும் எல்லைகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் ஆகிய இடங்களில் பயோமெட்ரிக் அட்டை எவ்வாறு பயன்படுத்தப்படும் என்றும், இந்த அடையாள அட்டையை உருவாக்குவதற்கு எந்தெந்த அந்நிய நாடுகள் அல்லது நிறுவனங்கள் உதவுகின்றன என்றும் இந்த அட்டையில் எந்த பயோமெட்ரிக் அடையாளம் (அதாவது விரல் ரேகைகள், முக அடையாளம், கண் கருவிழி ஸ்கேன் போன்றவை) சேர்க்கப்படும் என்றும் பயோமெட்ரிக் அடையாள சேகரிப்பு கருவிகளில் எந்தெந்த மென்பொருள் சிஸ்டம்கள், டேட்டாபேஸ்கள், அல்லது போர்ட் டல்கள் பயன்படுத்தப்படும் என்றும் இன்னும் இது போன்ற பல்வேறு விவரங்களையும் அறிந்து கொள்ள அமெரிக்கா ஆர்வம் காட்டியதாக கூறப் படுகிறது. சர்வதேச குண்டர்களின், கொள்ளையர் களின் தலைவனாக விளங்கும் எல்லாவிதமான சதிச்செயல்களிலும் துரோகங்களிலும் ஈடுபடுவதில் வல்லவனாக விளங்கும் அமெரிக்கா இத்திட்டத்தில் காட்டும் ஆர்வம் நம்முள் கடினமான கேள்விகளை எழுப்புகிறது. நம்மை மேலும் கதிகலங்கச் செய்யும் விஷயம் யாதெனில், ஆதார் திட்ட டேட்டாக்களை மேலாண்மை செய்யும் பணியை அக்சென்சர் (Accenture) போன்ற அமெரிக்க மென்பொருள் கம்பெனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக் கம்பெனிகள் அமெரிக்காவில் உள்நாட்டு பாது காப்பு துறையோடு தொடர்புடையவையாகும். தடுப்பு யுக்திகளை வடிவமைப்பது, உளவு தகவல் சேக ரிப்பை ஒழுங்குபடுத்துவது போன்றவை அக்சென்சர் கம்பெனியின் ப்ரொஃபைலில் இடம்பெற்றுள்ளன. இந்திய தேசிய அடையாள அட்டை திட்டத்தில் ஈடுபட்டுள்ள மற்றொரு அமெரிக்க நிறுவனம் எல்–1 (L-1) ஐடென்டிடி சொல்யூஷன்ஸ் ஆகும். இந்நிறுவனம் அமெரிக்காவின் உளவு நிறுவன மான சி ஐ ஏ வுடன் தொடர்பு கொண்டிருப்பதாக கூறப்படுகிறது. சி ஐ ஏ வின் முன்னாள் இயக்குந ரான ஜார்ஜ் டெனட், அமெரிக்க உள்நாட்டு பாது காப்பு துறையின் முன்னாள் துணைச் செயலாள ரான அட்மிரல் ஜேம்ஸ் லாய் ஆகியோர் எல்–1 (L-1) ஐடென்டிடி சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் இயக்குநர்களாக 2010ஆம் ஆண்டு வரை இருந்திருக்கிறார்கள்.

அரசியல் ரீதியில் மிக முக்கியமான தகவல் களை அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர் களுக்கு ரகசியமாக தருவதற்கான மறைமுக திட்டம் ஏதேனும் இந்திய அரசாங்கத்திடம் உள்ளதா? இதில் கெட்ட உள்நோக்கம் ஏதும் உள்ளதா? பதவியிறங்கு வதற்கு முன்பு எகிப்தின் கொடுங்கோல் ஆட்சி யாளனான ஹோஸ்னி முபாரக் எகிப்து குடி மக்கள் சம்பந்தப்பட்ட இது போன்ற தகவல்களை அமெரிக்க ஆட்சியாளர்களிடம் அளித்ததாக வெளியான தகவல்களால் இந்திய அரசாங்கத்தின் நோக்கம் குறித்தும் நமக்கு ஐயமெழுகிறது. அதே போல், பயோமெட்ரிக் அட்டைகளை அறிமுகப் படுத்திய பாகிஸ்தான் அரசாங்கமும் குடிமக்கள் தகவல்களை அமெரிக்க இராணுவ நிறுவனம் பென்டகனிடம் ஒப்படைத்ததை அறிந்து நமது சந்தேகம் வலுக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தி யத்தின் ஆதரவோடு ஆசியாவில் வல்லரசாக உரு வாகத் துடிக்கும் இந்திய ஏகபோக முதலாளித்துவ அரசானது இதுபோன்ற சதிச்செயல்களில் ஈடு படாது என நம்புவதற்கில்லை. எனவே, நாம் மிக கவனமாக செயல்பட வேண்டியது அவசியமாகும். அரசாங்கம் கூறுவதை அப்படியே ஏற்றுக் கொள்வது உகந்ததல்ல.

### ஆதார் மிகவும் அவசியமானதல்ல

நமக்கு கிடைத்திருக்கும் தகவல்கள், விவரங்கள், பிற நாடுகளின் அனுபவங்கள், இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட வாதப்பிரதிவாதங்கள் அனைத்தும் ஆதார் திட்டம் மிக அவசியமான ஒன்றல்ல என்பதையே காட்டுகிறது. எந்த நோக்கத் திற்காக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறதோ அந்நோக்கத்தை அடையாளம் கண்டறிய தற் போதுள்ள அடையாள அட்டைகளைக் கொண்டே அடைய முடியும். தேவைப்படின், இவற்றில் சில மாறுதல்களை செய்துகொள்ளலாம். அரசாங்கத்தின் வேறு எந்த திட்டத்தையும் போலவே ஆதார் திட்டத்தையும் தற்போது நிலவும் முதலாளித்துவ அமைப்பு முறையிலிருந்து தனியே பிரித்துப் பார்க்க முடியாது.

ஆதார் திட்டம் எவ்வித ஓட்டைகளும் இல்லாதது என்று இதற்காக வாதிடுவோர் கூறுகின்றனர். துரோகம், சதிச்செயல்கள், ஆவணங்கள் மற்றும் முறைமைகளை அழித்தல் திருடுதல், உண்மை அடை யாளத்தை வெளிக்காட்டாமல் (அதாவது போலி அடையாளம் கொண்டு) தகவல்களை தன் தேவைக் கேற்ப கையாளுதல், இன்னும் இதுபோன்ற பல்வேறு துரோகங்களும் சதிச்செயல்களும் முதலாளித்துவ அமைப்பு முறையில் உள்ளூர இருப்பவையாகும். தொழில்நுட்பமும் இவற்றுக்கு விதிவிலக்கல்ல. தொழில்நுட்பத்தின் உதவிகொண்டு ஓட்டையற்ற முறைமையை வடிவமைக்க முடியுமானால் சைபர் குற்றங்கள் ஏன் அதிகரிக்கின்றன? தகவல் தொழில் நுட்ப களத்தில் ஒவ்வொரு புதுமையான சிஸ்டம்கள் புகுத்தப்படும்போது அவற்றை ஹேக் செய்வதும் (திருட்டுத்தனமாக இணையதளம் மூலமாக மென்பொருளைப் பயன்படுத்தி கைப்பற்றுவது) ஏன் கூடவே நடக்கிறது? எனவே, இத்தகைய சூழ் நிலையில் அனைத்து நன்மை, தீமைகளையும் நன்கு அலசி ஆராயாமல், பின் விளைவுகளைப்பற்றி நன்கு ஆலோசிக்காமல் ஆதார் திட்டத்தை அனுமதிப்ப தென்பது என்ற கேள்விக்கே இடமில்லை.

பாராளுமன்றத்தின் நம்பிக்கையை பெறாமல் இத்தகைய முக்கியமான நடவடிக்கையை ஒருக் காலும் மேற்கொள்ளக்கூடாது. பாராளுமன்றத் திற்கு இத்திட்டத்தை பரிந்துரைப்பதற்கு முன்பு பரந்துபட்ட மக்கட் பிரிவினரையும் அனைத்து அரசியல் கட்சிகளையும், தன்னார்வ நிறுவனங் களையும் வல்லுநர்களையும் ஈடுபடுத்தி இத்திட்டம் தொடர்பாக பரவலான விவாதங்களும் கலந்துரை யாடல்களும், உரைகளும் நடத்தப்பட வேண்டும். தர்க்கம் மற்றும் பகுத்தறிவின் துணைகொண்டு இத்திட்டத்தின் ஒவ்வொரு அம்சம் பற்றியும் மிக நுணுக்கமான ஆய்வுக்கும் சரிபார்ப்புக்கும் உட் படுத்தப்படவேண்டும். மக்கள் கண்ணோட்டத்தி லிருந்து இந்த ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்கின்ற போக்கில் இத்திட்டத்தை அமல் படுத்துவதா அல்லது கைவிடுவதா என்பது பற்றி ஒருமித்த கருத்து எய்தப்பட வேண்டும். இவ்வாறு ஒருமித்த கருத்து எட்டப்படும்வரை இத்திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும். இந்த செயல்முறை போக்கை சாத்தியமாக்குவதற்கு ஏதுவாக சக்திவாய்ந்த மக்கள் கருத்தை திரட்ட வேண்டும்.

## மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம் ஏ ஐ எம் எஸ் எஸ் அனுஷ்டிப்பு



சென்னை




தேனி

சர்வதேச மகளிர் தினம் சென்னை, நெய்வேலி, மதுரை, தேனி ஆகிய இடங்களில் புகைப்படக் கண்காட்சி, பேரணி, பொதுக்கூட்டம் மூலமாக அனுஷ்டிக்கப்பட்டது

Registered News Paper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 30th April 2013

பாட்டாளி சிந்தனை

Post. Reg. No: TN/CCN/429/2012-14
WPP Licence No.: TN/CCN/153/2012-14
Registered with the Registrar of Newspaper in India No : 62018/88

# ஆளும் பூர்ஷ்வாக்கள் தனது தீய வர்க்க நலனைக் காக்க ஜாதி–மதவாத அடிப்படையில் மக்களை துண்டாடுகின்றனர்

5ம் பக்கம் தொடர்ச்சி

மக்கள் மண்டிக்கிடக்கும் குடிசைகளின் கூட்டத்திற்குள் எஸ் சி, எஸ் டி மற்றும் ஓ பி சி பிரிவினர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்கு கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் சிறப்பு முன்னுரிமைகள் எவ்வாறு வழங்கிடமுடியும்? இது மேலும் ஒரு சமத்துவமற்ற சமூகத்தையல்லவா உருவாக்கிடும். (ஸ்டேட்ஸ்மென் 17.02.2013).

இதனை மேலும் விளக்கி அவர் கூறும்போது ''உதாரணத்திற்கு ஒரு பேராசிரியையை மணமுடித்த ஒரு பல்கலைப் பேராசிரியரை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களின் பெற்றோர்கள் பள்ளியாசிரியர்களாக பணியாற்றியவர்கள்தான். இன்று இவர்கள் ஈட்டும் பணம் அவர்களின் பெற்றோர்கள் ஒரு போதும் பார்த்திராத தொகையாகும். உண்மையில் அநேக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் வருமான பட்டியலைப்பார்த்து வியப்பில் ஆழ்ந்துபோகிறார்கள். அநேக பழங்குடி இனத்தவர்களின் குழந்தைகள் மேகாலயா மாநிலத்திலோ அல்லது வடகிழக்கு மாநிலங்களிலோ கல்வி கற்பதில்லை அவர்கள் நாட்டின் மிகச் சிறந்த கல்வி நிலையங்களிலோ அல்லது வெளிநாடுகளிலோ கல்வி கற்கிறார்கள். அத்தகைய பொருளாதார அந்தஸ்த்தை அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். அவர்களுக்கு அது முடிகிறது. இம்மாதிரியானவர்கள் அவர்கள் இந்த பழங்குடி இன சமுகத்திலிருந்தும் ஏதுமற்ற சமூகப் பின்னணியிலிருந்தும் வந்தவர்கள் என்ற ஒரு காரணத்திற்காக இந்த இடஒதுக்கீட்டைத் தொடர்ந்து அனுபவித்து வரவேண்டுமா? இது சமத்துவமின்மை அல்லவா?

அநேக பழங்குடி இனத்தவர்கள் செல்வந்தர்களாகவும் நடுத்தர வர்க்கமாகவும் ஏழைகளாகவும் மாறியிருப்பதைக் கண்டபின்பும்கூட இது இன்று பேசப்பட வேண்டிய ஒரு விசயமாக இல்லையா? மேலும் அரசானது சமத்துவமின்மையை சரிப்படுத்தவுமில்லை அதே நேரத்தில் இந்த சரிசமப்படுத்தும் செயல்திட்டத்தை மறுசீரமைப்பதில் அதன் இயலாமையின் காரணமாக சமத்துவமற்ற வர்க்கங்களை தானே உருவாக்கியும் வருகிறது." (ஸ்டேட்ஸ்மென் 17.2.2013)

### அறிவுத்துறையினருக்கு ஒரு வேண்டுகோள்

திரு முகிம் அவர்கள், அசாத்தியத் துணிவோடும் சிந்தனைத்தெளிவோடும் யதார்த்தத்தை எடுத்துரைத்ததுடன் எவ்விதமான பாரபட்சத்திற்கும் இடங்கொடுக்காமல் அல்லது குறுகிய நலன்களிலிருந்து விடுபட்டு உண்மையை உயர்த்திப் பிடித்திருக்கின்ற முறையை நாம் மனம்திறந்து பாராட்டுகின்றோம். மேலும் இது அனைவருக்கும் ஒரு வழிகாட்டுதலாக இருந்திடவேண்டும். மேலும் இது ஒவ்வொரு பத்திரிகையாளருக்கும், பத்திரிகை எழுத்தாளர்களுக்கும் ஒரு பாடமாக அமைந்திட வேண்டும். முதலாளித்துவத்தில் ஒவ்வொரு தொழிலும் சந்தைச்சரக்காக மாறிவருகிறது. ஒவ்வொரு திறமையும் பிற்போக்கு சக்திகளால் விலைக்கு வாங்கப்படத்தக்க நிலையில் இருக்கிறது, வெட்கங்கெட்ட முறையில் அதிகார வர்க்கத்தினரை பாதுகாப்பதன் மூலம் சுலபமாகப் பணம் சம்பாதிப்பது அன்றாட நிகழ்வாகிவிட்டது. ஒருவர் தன் மனச்சாட்சியை அடகுவைப்பது நடைமுறை வாதம் என்று பெயர் சூட்டப்படுகிறது. உண்மையைச் சீர்குலைப்பதும் யதார்த்தத்தை தலைகீழாக்குவதும் இதழியல் திறமை என்று பார்க்கப்படுகிறது. இதழியலாளனின் வெற்றியின் திறவுகோல் – அவன் தன் எஜமானனின் கட்டளைக்குப் பணிந்து நடப்பதுதான் என்று சொல்லப்பட்டுவருகிறது. இதற்கு விதிவிலக்காக மற்றும் தற்போதைய (மோசமான) நீரோட்டத்திற்கு எதிராக எதிர்நீச்சல் போடுபவர்கள் உண்மையை நாடும் உழைக்கும் வர்க்கத்தினரிடமிருந்தும் மற்றும் ஜனநாயக சிந்தனை கொண்ட நற்சிந்தனை கொண்டவர்களிடமிருந்தும் பாராட்டையும் ஆதரவையும் பெறுவார்கள். திரு முகிம் அவர்கள் சமூக நன்மைக்கு ஆற்றிவரும் சேவையைத் தொடர்ந்து செய்வார் என்றும் அதன்மூலம் அவர் இதழியல் களத்தில் மற்றவர்களுக்கும் மற்றும் அறிவுத்துறையினருக்கும் ஒரு உதாரணமாகத் திகழ்வார் என்றும் நம்புகிறோம்.

## மறைந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (எல் டி டி ஈ) இயக்கத் தலைவர் வே பிரபாகரனின் 12வயது மகன் பாலச்சந்திரனை இலங்கை இராணுவம் கொடூரமாகக் கொன்றதை எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாகக் கண்டிப்பதுடன் இலங்கையில் இனவெறி மோதலை தூண்டி வளர்த்து வரும் ஏகாதிபத்தியங்களின் நடவடிக்கைகளையும் கண்டிக்கிறது

*எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயளாலர் பிரவாஸ் கோஷ் 22.3.2013 அன்று விடுத்த அறிக்கை பின்வருமாறு:*

பிரிட்டனின் (UK) தொலைக்காட்சி சானல் 4 லில் காலம் தாழ்த்திக் காட்டப்பட்ட, மறைந்த எல் டி டி இ தலைவர் வே பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரனை காவலில் வைத்து 2009ல் இலங்கை இராணுவம் மிகக் கொடூரமாகக் கொன்றதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இன்று வெளிவரும் இவ் உண்மை, எல் டி டி ஈக்கு எதிராக நடத்திய போரில் குண்டடிபட்டு அவன் இறந்தான் என்ற இலங்கை இராணுவத்தின் முந்தைய செய்தி எத்தகைய புனையப்பட்ட கட்டுக்கதை என்பதைக் காட்டுகிறது. இது சர்வதேச பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயல் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இது வெறியுணர்வால் நடத்தப்பட்ட திட்டமிட்ட படுகொலையன்றி வேறல்ல.

இலங்கையின் ஆளும் பூர்ஷுவாக்களுடன் கூட்டு சேர்ந்து ஏகாதிபத்திய சக்திகளால் ஆதரிக்கப்பட்ட திட்டமிட்டு தூண்டிவிடப்பட்ட மிக மோசமான இனவெறி மோதல்களுக்கும் சண்டைகளுக்கும் மையமாக இலங்கை இருந்துவருகிறது. இது ஏற்கெனவே பல ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிரைப்பறித்து மேலும் பல ஆயிரக்கணக்கானோரை தாய் மண்ணைவிட்டு விரட்டியிருக்கிறது. இந்தத் துணைக்கண்டத்தில் வெல்லற்கரிய சூப்பர் பவராக தன்னை நிலைநாட்ட முயற்சித்துவரும், ஏகாதிபத்திய குணாம்சத்தை வளர்த்துக் கொண்டுவிட்ட இந்திய பூர்ஷுவாக்களும் தமது வர்க்க நலனுக்காக இரத்தவெள்ளதில் மூழ்கடிக்கும் இப்பேரழிவை தூபம் போட்டு வளர்த்துக் கொண்டிருக்கின்றது.

மறுபுறம், ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் பல இலட்சக்கணக்கான அப்பாவி மக்களை கொன்று இரத்தக்கறை படிந்த கரங்களைக் கொண்டதும் வேற்று நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதில் உள்நாட்டில் குழப்பங்களை விளைவிப்பதில் இனப் பிரச்சினைகளை தூண்டுவதில் ஆட்சிகளைக் கவிழ்ப்பதில் அவர்களின் இறையாண்மையை காலில் போட்டு மிதிப்பதில் வரலாற்றுத்தடம் பதித்துவிட்ட உலக ஏகாதிபத்திய நாயகனான அமெரிக்க ஏகாதிபத்தியம், இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை மீறிவிட்டதாக குற்றம் சாட்டும் தீர்மானம் ஒன்றை ஐ நா சபையில் முன்வைத்திருக்கிறது. இது, உலக மக்கள் கவனத்தை திசைத்திருப்புவது மட்டுமின்றி இலங்கையில் அதிகாரத்திலிருப்போரிடம் சில சலுகைகளையும் பலன்களையும் பெற அவர்கள் மீது அழுத்தம் கொடுக்கும் தந்திரமாகும்.

இன உணர்வுகளை, அது தமிழின உணர்வானாலும் சரி சிங்கள இன உணர்வானாலும் சரி, ஆதரிப்பதன் மூலம் இலங்கையில் இனப் பிரச்சினையை தீர்க்க முடியாதது மட்டுமின்றி அது மேலும் அதிகரிக்கவே செய்யும் என நாங்கள் உறுதியாகக் கருதுகிறோம். குறுகிய, பிரிவினைவாத கண்ணோட்டத்திலிருந்து விடுபட்டு சரியாக சிந்திக்கும் ஜனநாயக மதச்சார்பற்ற எண்ணம் கொண்ட மக்களின் உறுதியான முன்முயற்சியினால் மட்டுமே இப்பிரச்சினையை தீர்க்கமுடியும்.

பாதிப்படைந்திருக்கும் இலங்கை மக்களுக்காக எங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்தும் அதே வேளையில் இரண்டு பிரதான இன மக்களிடையே பிளவினையை ஏற்படுத்தும் இலங்கை பூர்ஷுவாக்களின் துவேஷ நடவடிக்கைகளுக்கு எதிராகவும் அன்னிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராகவும் அம்மக்கள் ஒன்றுபட்டு போராட வேண்டும் எனவும் பாலச்சந்திரனின் கொடூரக் கொலை குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

## இலங்கையில் தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் கொடூரத் தாக்குதல் குறித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) எம் பி தோழர் தருண் மண்டல் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை:

தமிழ் மக்கள் மீது இலங்கை இராணுவம் நடத்திவரும் காட்டுமிராண்டித்தனமான கொடூரங்கள் குறித்து எஸ் யு சி ஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் எம் பி தோழர் தருண் மண்டல் பாராளுமன்றத்தில் அவையின் கவனத்தை ஈர்த்தார். இத்தகைய குற்றங்கள் யாவும் மனித உரிமையின் சர்வதேச விதிகள், மரபுகள், ஒப்பந்தங்கள் ஆகியவற்றை ஒட்டு மொத்தமாக குழி தோண்டிப் புதைத்து விட்டன. இவை நாஜிகளின் காட்டுமிராண்டித்தனத்தை, வியட்நாமிலும், ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் நடத்தப்பட்ட போர்க் குற்றங்களை நினைவுபடுத்துவதாகவும் அவர் கூறினார். இத்தகைய காட்டுமிராண்டிச் செயல்களுக்குக் காரணமான இலங்கை ராணுவ அதிகாரிகளை கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்றார். அதே நேரத்தில் இதேபோன்று காஷ்மீர் மணிப்பூர் மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களையும் உடனடியாக முழுமையாக நிறுத்த வேண்டும் என்றார்.

மேலும், இலங்கை தமிழ் மக்களின் இன உணர்வு, மொழி, சமத்துவ மற்றும் சுதந்திரத்தை இலங்கை அரசாங்கம் மதித்து பாதுகாக்கவேண்டும் என்றார். காயமடைந்த மற்றும் மடிந்துவிட்டவர்களின் குடும்பங்களுக்கு சர்வதேச தரப்படி தகுந்த நஷ்ட ஈடு வழங்கவேண்டும். புலம் பெயர்ந்த மற்றும் வீடிழந்தவர்களுக்கு மறுவாழ்வு உத்திரவாதம் செய்யப்படவேண்டும் என தோழர் தருண் மண்டல் கோரினார்.

அனைத்து முதலாளித்துவ நாடுகள் செய்வதைப் போலவே இலங்கை அரசாங்கமும் உழைக்கும் மக்கள் மத்தியில் வளர்ந்துவரும் ஒற்றுமையை உடைப்பதற்கு குறுகிய பிரிவினைவாத இனவெறி உணர்வுகளை தூண்டி வளர்த்து ஒரு சாராரை மற்றொரு சாராருக்கு எதிராக எதிராளிகளாக நிறுத்துகிறது என்பதை நாம் அறிவோம் என்று கூறிய அவர், இந்திய அரசாங்கமும் தனது சர்வதேச கடமைகளை நிறைவேற்றவேண்டும் என்றும் இந்தியா மற்றும் அண்டைநாடுகளின் சாமானிய குடிமக்கள் சமாதானத்துடனும் நல்லிணக்கத்துடனும் மரியாதையுடனும் வாழ்வதை உறுதி செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.suci-c.in